பக்கங்கள் : 20
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 23
ஒலி 315 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 13 ஞாயிற்றுக்கிழமை (30.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/= மட்டுமே

## நாட்டை அழித்த கும்பல்
# மீண்டும் எழ முயல்கின்றது



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டை அழித்து சாம்பலாக்கிய கும்பல் சாம்பலிருந்து மீள எழ முயற்சிக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு உட்பட நாட்டின்
# சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு உட்பட நாட்டின் சில இடங்களில் மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங் 19

## கலாநிதி சீவரட்ணம்
# பேராசிரியராக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)



விவசாய பீடத்தின் பீடாதிபதி கலாநிதி சீவரட்ணம் வசந்தரூபா பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். 19

# யாழ்.பஸ் நிலையத்தில் பெண் சடலமாக மீட்பு
## அடையாளம் காட்டுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் உடலை அடையாளம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் நேற்று சனிக்கிழமை காலை பெண் ஒருவரின் சடலம் காணப்படுவதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சுமார் 60 வயது மதிக்கத்தக்க கறுப்பு 19



## ஓரணியில் பயணித்தாலேயே நாட்டுக்கு மீளெழுச்சி
# 22வது திருத்த சட்டமூலம்
## நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியாது
### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டை மீளக்கட்டி யெழுப்ப முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல் நிலைவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு 19

# நவம்பர் 2 அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்துக்கு முழு ஆதரவு



### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத்திற்கு எதிரான அரசாங்கத்தின் அடக்கு முறை, பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் இடம்பெறும் போராட்டத்திற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

மக்கள் போராட்டம் வெகுவிரைவில் 02

# 11 பவுண் தாலிக்கொடி கரவெட்டி மத்தியில் திருட்டு

(கரணவாய்)

கரவெட்டி மத்தி, வளர்மதி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் 11 பவுண் தாலிக்கொடி திருடப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இம் முறைப்பாடு நேற்று சனிக்கிழமை முற்பகல் செய்யப்பட்டுள்ளது.

இரண்டு வீடுகள் அருகருகாக இருக்கும் நிலையில் ஒரு வீட்டிலேயே இரண்டு வீட்டாரும் தங்குவதாகவும் நேற்று சனிக்கிழமை காலை பார்த்த போதே ஆட்கள் இல்லாத வீட்டில் வைக்கப்பட்டிருந்த 11 பவுண் 19

# வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழா



19

# லிட்ரோ எரிவாயு விலை
## மீண்டும் குறைகின்றது

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் 5ஆம் திகதி 19

## வாரத்தில் ஒருநாள்
# துவிச்சக்கரவண்டியில் கடமைக்கு வரவேண்டும்
### அரச ஊழியர்களுக்கு விரைவில் திட்டம்

(கொழும்பு)

தமது ஊழியர்களுக்கு, வாரத்தில் ஒருநாள் துவிச்சக்கரவண்டியில் பணிக்கு வருவதற்கான விசேட திட்டத்தை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 31ஆம் திகதி திங்கட்கிழமை நினைவுகூரப்படும் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 04 - 04 - 1947

இறப்பு 29 - 10 - 2022

## சிவராமலிங்கம் மகேஸ்வரி

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவராமலிங்கம் மகேஸ்வரி நேற்று (29.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகளும் செல்வரட்ணம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சிவராமலிங்கம் (இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும் சிவதரன் (வட. பிராந்திய முகாமையாளர் - இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்) அவர்களின் அருமைத் தாயாரும் கலைச்செல்வி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு ஆணைக்குழு) அவர்களின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பாக்கியலட்சுமி, பேரம்பலம், நகுலாம்பிகை, பரமானந்தசிவம் மற்றும் இலட்சனையதேவி, சண்முகராசா, கிருபாதேவி, கண்ணுத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் துரைசிங்கத்தின் அருமை மைத்துனியும் இனோஜன், கர்சினி, மகிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (13301)

இல. 192, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். 077 502 3457

தகவல் :-
மகன் சிவதரன்

## நவம்பர் 2 அர...

கிளர்ச்சியாக வெளிப்படும் என பாரா ளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

சிவில் அமைப்புக்களின் தலைவர்களு டன் கொழும்பில் இடம்பெற்ற பேச்சுவார்த் தையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து ரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத் தில் இரட்டை குடியுரிமை உடையவர் பாராளுமன்ற உறுப் பினராக பதவி வகிப் பதற்கு தடை விதிக் கப்பட்டது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத் தத்தில் அந்த தடை ஒரு நபரின் அரசி யல் பிரவேசத்திற் காக நீக்கப்பட்டது என்றார். (ம-7)


## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்கள், பிள்ளைகளின் யாதகக் குறிப்புகள், அவர்களின் பலன்களும் துல்லியமாக கணித்து பெற்றுக் கொள்ளலாம். திருமணத்திற்கு வெளிநாடு செல்ல விரும்பும் மணமக்கள் உடனடியாக தேவை. எல்லா வயதினரும் தொடர்பு கொள்ளவும்.

**காயத்திரி திருமண சேவை**

தொடர்புகளுக்கு (உரும்பிராய்)
076 835 1932 / 021 223 2222
வெளிநாட்டு திருமணத் தொடர்புகளுக்கு
Wahlen STR - 143 - 4242 Laufen, Swiss
Tel: 0041768185443 Whatsapp இல் மட்டும் (13300)


# மரண அறிவித்தல்

## வைரமுத்து அரியகுட்டி



பிறப்பு : 17.04.1942
இறப்பு : 29.10.2022

குரும்பசிட்டி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து அரியகுட்டி நேற்று (29.10.2022) சனிக்கிழமை காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியள வில் ( ஈவினை பிள்ளையார் கோவில் வீதி, புன்னாலைக்கட் டுவன், யாழ்ப்பாணம் ) அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (C-5181)

077 028 7062

தகவல் :-
குடும்பத்தினர்

# அந்தியேட்டி அழைப்பும்
## நன்றி நவிலலும்



கடந்த 30.09.2022 அன்று இறைபதம் அடைந்த எமது தாயார்

## அமரர் மண்டலேஸ்வரி இராஜேந்திரம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். நாளை மறுதினம் (01.11.2022) செவ்வாய்க் கிழமை 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.


எனது தாயார் இறைபதமடைந்தது முதல் இற்றைவரை உடனிருந்து ஆறுதல்கூறி தன்னலம் பாராது உதவிபுரிந்த அன்புள்ளங்களுக்கும் நேரில் வந்தும் தொலைபேசி, முகப்புத்தகம், பதாதை, கண்ணீர் அஞ்சலி மற்றும் பிறவழிகளிலும் தம் துயரினைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் இறுதிக் கிரியைகளிலும் இறுதி ஊர்வலத் திலும் பங்குகொண்ட அனைத்துள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனது தாயாரின் இறுதி நிகழ்வின்போது நான் உணர்வுகளுக்கு அடிமையாகியிருந்த தருணத்தில் எனது ஞாபகத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் நான் யாருக்காவது தனிப்பட்ட அழைப்பைத் தரத்தவறியிருப்பின் அதனை மன்னித்து பெருமனதோடு இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அந்தியேட்டி, மதியபோசன நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றேன். (C-5179)

திருமகள் இல்லம்,
யார்வத்தை, வதிரி, கரவெட்டி.

மகன்

# 31ஆம் நாள் நினைவு வணக்கமும்
## நன்றி நவிலலும்



தோற்றம் 29 - 10 - 1937

மறைவு 01 - 10 - 2022

யாழ். பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் ஆலடி வீதி வல்வெட்டித்துறையை வதிவடமாகவும் கொண்ட

## அமரர் அம்மையப்பிள்ளை சிவகணேஸ்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு வணக்கமும் நன்றி நவிலலும்

கடந்த 01.10.2022 சிவபதமடைந்த எமது தந்தையின் மறைவுச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் சமூக வலைத்தளங்களூடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித் தவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எமக்கு சக உதவிகளைச் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தந்தையின் அந்தியேட்டிக் கிரியைகள் 31.10.2022 திங்கள் அதிகாலை கீரிமலை கடலில் அஸ்தி கரைத்தலைத் தொடர்ந்து எமது இல்லத்தில் (ஆலடி வீதி, வல்வெட்டித்துறை) நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைச்சோலை,
வல்வெட்டித்துறை. (C-5150)

தகவல்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுக்காக வீதியில் இறங்கும் மக்கள் பயங்கரவாதிகள் அல்ல

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது பயங்கரவாதம் இல்லை எனவும் சாப்பிடவும் குடிக்கவும் உணவு கேட்டு வீதியில் இறங்கும் மக்கள் பயங்கரவாதிகள் அல்ல எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகேவின் நலன் அறிய நேற்று முன்தினம் சென்றிருந்த போதே ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ள சரத் பொன்சேகா இதனைக் கூறியுள்ளார்.

வசந்த முதலிகே என்ற பல்கலைக்கழக மாணவன், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 90 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். 90 நாட்கள் தடுப்பு காவல் அனுமதி பெற்று ஏற்கனவே இரண்டு மாதங்கள் தடுத்து வைத்துள்ளனர்.

இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். நாட்டில் பயங்கரவாதம் இல்லை. நாட்டு மக்கள், சாப்பிடவும் குடிக்கவும் இல்லாத காரணத்தினால் குரல் எழுப்புகின்றனர்.

பயங்கரவாதத்தை உருவாக்கி, அப்படி குரல் கொடுக்கும் மக்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி தடுத்து வைத்திருப்பது, கோழைத்தனமான செயல் என்பதுடன் அடிப்படை உரிமை மீறலாக நாங்கள் பார்க்கின்றோம். அதே போல் மனித உரிமை மீறல்.

வசந்த முதலிகே சுகவீனமாக இருப்பதாக நாங்கள் கேள்விப்பட்டோம். வசந்த முதலிகேவுக்கு மோசமான தொழு நோய் ஒன்று ஏற்பட்டுள்ளது. அவருக்கு வழங்கப்படும் வசதிகளின் குறைபாடுகள் காரணமாக இந்த நோய் ஏற்பட்டுள்ளது.

இவற்றுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். இளம் பிள்ளைகளை பிடித்துக் கொண்டு வந்து, இங்கு தடுத்து வைக்கும் போது, அவர்களுக்கு நோய்கள் தொற்றும். உயிருக்கும் ஆபத்து.

இது மிகவும் பயங்கரமான நிலைமை. அரச பயங்கரவாதம் இருப்பதாக எனக்கு தோன்றுகிறது. இதற்கு எதிராக நாங்கள் அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுப்போம். பாராளுமன்றத்தில் இது தொடர்பாக நான் தொடர்ந்தும் குரல் கொடுப்பேன் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். (4)

# சீனாவின் கண்காணிப்பு வடக்கில் அதிகரிப்பு

## தமிழ்நாடு புலனாய்வுப்பிரிவு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கில் கடலட்டை வளர்ப்பை தொடங்குவதற்கு சீன இராணுவம் அதிநவீன சாதனங்களைப் பயன்படுத்துகின்றது என தமிழ்நாடு புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இலங்கையில் சீன இராணுவத்தின் பிரசன்னம் அதிகரித்துள்ளமை குறித்து தமிழ்நாடு கரிசனை வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் மாநில புலனாய்வுப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அயல் நாட்டில் சீனாவின் நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகத் தெரிவித்துள்ள மாநில புலனாய்வுப் பிரிவு கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பை அதிகரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சீன இராணுவத்தினரின் நடமாட்டம், செய்மதிகள் போன்ற உயர் தொழில்நுட்ப சாதனங்கள் பயன்பாடு, இலங்கையின் வட பகுதியில் ஆளில்லா விமானங்கள், ஏனைய சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றமை போன்றவற்றினால் தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகள் அவசியம் என மாநில புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (4)

# எந்தவொரு இராணுவக் கூட்டணியிலும் இலங்கை பங்கேற்காது

## ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடல் உலக இராணுவ சக்திகளின் மோதலுக்குரிய பகுதியாகவோ அல்லது விளையாட்டு மைதானமாகவோ இருக்கக் கூடாது என இலங்கை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கடல்சார் பாதுகாப்பை உறுதி செய்வது நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு என்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் முழுவதும் உள்ள கடல்சார் இராஜதந்திரத்தை மற்ற பெருங்கடல்களுடன் இணைவதற்கு மேலும் வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கை எந்தவொரு இராணுவக் கூட்டணியிலும் பங்கேற்காது என்றும் பசுபிக் பிராந்தியத்தின் பிரச்சினைகள் இங்கு வருவதை விரும்பவில்லை என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலக வல்லரசுகளின் போட்டியிலிருந்து இலங்கை எப்போதுமே விலகி இருக்கும் என்றும் இந்தப் போட்டிகள் எதுவும் இந்தியப் பெருங்கடலில் மோதலுக்கு வழிவகுக்காது என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (4)

# தமிழ் அரசியல் கைதிக்கு அரச இலக்கிய விருது

(கொழும்பு)

இலக்கியவாதிகளுக்கு உரிய பாராட்டுகளை வழங்குவதற்காக வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் அரச இலக்கிய விருது வழங்கும் விழாவில் தமிழ் அரசியல் கைதி ஒருவரும் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

2006 கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்ட பொறியியலாளர் சி. ஆரூரனுக்கு அரச இலக்கிய விருது கிடைத்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்நிகழ்வு பிரம்மாண்டமாக நடைபெற்றது.

சிறையில் இருந்தவாறே, சி. ஆரூரன் 8 புத்தகங்களை எழுதியுள்ள நிலையில் அதில் ஆதுரசாலை என்ற தமிழ் நாவலுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (4)

# ஸ்பெய்னில் காணாமல்போன இலங்கை மல்யுத்த வீரர்கள்

(கொழும்பு)

ஸ்பெயினில் நடைபெறும் 23 வயதுக்குட்பட்ட உலக மல்யுத்த சம்பியன் ஷிப் போட்டியில் கலந்து கொள்ள சென்றிருந்த மூன்று இலங்கை விளையாட்டு வீரர்கள் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதியே ஆண்களை உள்ளடக்கிய 6 பேர் கொண்ட அணியில் இருவர் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து மூன்றாவது விளையாட்டு வீரரும் மறுநாள் காணாமல் போனதாக இலங்கை மல்யுத்த சம்மேளனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (4)

# இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் அத்தியாவசிய மருந்துகள்

(கொழும்பு)

நாட்டில் பற்றாக்குறையாக உள்ள அத்தியாவசிய மருந்துகள் உட்பட 1,300 வகையான மருந்துகள் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1200 இற்கும் மேற்பட்ட சத்திர சிகிச்சை கருவிகளுக்கும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

டிசெம்பர் மாதத்துக்குள் குறித்த கையிருப்பு நாட்டிற்கு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டால் அரசாங்கம் கவிழ்வது உறுதி

## பேராசிரியர் சன்ன ஜயசுமண



(கொழும்பு)

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்படுமாயின் அரசாங்கம் கவிழும் அபாயம் காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

22 திருத்தத்திற்கு வாக்களிக்காத ஆளும்கட்சி உறுப்பினர்கள் வரவு- செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் எதிராக வாக்களிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறான நிலையில் வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு, அரசாங்கத்தைக் கலைக்க வற்புறுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேராசிரியர் சன்ன ஜயசுமண இதனைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் ஒரு சிறிய பகுதியானாலும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கினால், வரவு-செலவுத் திட்டம் நிச்சயமாக தோற்கடிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (4)


**பணியாளர் தேவை**

விமான பயணச்சீட்டு மற்றும் விசா ஆலோசனை நிறுவனத்தில் பணிபுரிய கண்னி அறிவுடைய பெண்கள் தேவை. சுயவிபரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

காலம் - 31.11.2022 காலை 10.00 -2.00 மணிவரை

இடம் - Hybrid international (PVT) LTD
இல.36 வைத்திலிங்கம் துரைசாமி வீதி,
(LIC கட்டடம், வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
யாழ்ப்பாணம். (13293)

தொ.பே- 076 2500 098


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானை வீழ்த்தியது சிம்பாவே அணி



இருபது - 20 உலகக்கிண்ண தொடரில் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் சிம்பாவே அணி ஒரு ஓட்டத்தினால் வெற்றி பெற்றுள்ளது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனையடுத்து 131 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 129 ஓட்டங்களை மாத்திரமே பெற்று ஒரு ஓட்டத்தினால் தோல்வியடைந்தது.

பாகிஸ்தான் அணி சார்பாக ஷான் மசூட் அதிகபட்சமாக 44 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இந்த வெற்றியின் ஊடாக குழு 2 இன் புள்ளிப்பட்டியலில் சிம்பாவே அணி 3 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதோடு பாகிஸ்தான் அணி இது வரையில் எவ்விதமான புள்ளிகளையும் பெறாமல் 5 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# அரையிறுதி போட்டியுடன் இந்திய அணி வெளியேறும்

## பாக்.முன்னாள் பந்துவீச்சாளர்



20 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் சிம்பாவேக்கு எதிராக ஒரு ஓட்டத்தில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. இதனால் அந்த அணியின் அரையிறுதி வாய்ப்பு மங்கி போய் விட்டது.

இது குறித்து பாகிஸ்தான் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தர் கருத்து தெரிவிக்கையில், பாகிஸ்தான் அணி இந்த வாரத்துடன் தாயகம் திரும்பி விடும் என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்.

இதேபோல் இந்திய அணி அடுத்த வாரம் அரையிறுதியில் விளையாடியதுடன் தாயகம் திரும்பும். இந்தியா ஒன்றும் தோற்கடிக்க முடியாத அணி அல்ல.

நாங்கள் அதைவிட மோசமாக இருக்கிறோம். பாகிஸ்தானின் செயற்பாடு மெச்சும்படி இல்லை. வீரர்கள் தேர்வும் சரியில்லை என்று அக்தர் கூறியுள்ளார். (4)

# உலகக்கிண்ண தொடரில்

## புதிய சாதனை படைக்கவுள்ள விராட்

சர்வதேச இருபது -20 கிரிக்கெட்டில் விராட் கோலி புதிய சாதனை ஒன்றை படைக்கவுள்ளார். பாகிஸ்தானுக்கு எதிராக 53 பந்துகளில் 82 ஓட்டங்கள் குவித்தார்.



நெதர்லாந்துக்கு எதிராக 62 ஓட்டங்கள் விளாசினார். தொடர்ந்து இரண்டு அரைசதம் மற்றும் ஒரு முறை கூட ஆட்டம் இழக்காமல் விராட் கோலி சிறப்பாக விளையாடி வருகிறார். நடப்பு இருபது - 20 உலகக்கோப் பையில் விளையாடிய விராட் கோலி இரண்டு போட்டியில் மொத்தம் 144 ஓட்டங்கள் அடித்திருக்கிறார். இதன் மூலம் விராட் கோலி புதிய சாதனையை படைத்திருக்கிறார்.

இருபது -20 உலகக் கிண்ண வரலாற்றில் விராட் கோலி 23 போட்டிகளில் விளையாடி தற்போது 989 ஓட்டங்கள் விளாசி இருக்கிறார். இதன் மூலம் இந்தப் பட்டியலில் கிறிஸ் கெயிலை பின்னுக்கு தள்ளி விராட் கோலி இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார். விராட் கோலி இன்னும் 11 ஓட்டங்கள் எடுத்தால் இருபது -20 உலகக் கிண்ணத்தில் 1000 ஓட்டங்கள் எடுத்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையை படைப்பார்.

மேலும் ஒட்டுமொத்தமாக இருபது-20 உலகக் கிண்ணத்தில் ஆயிரம் ஓட்டங்கள் எடுத்த 2 ஆவது வீரர் என்ற சாதனையையும் அவர் படைப்பார். முதல் இடத்தில் இலங்கை வீரர் ஜெயவர்தனே உள்ளார். இன்னும் 27 ஓட்டங்கள் கூடுதலாக அடித்தால் இருபது-20 உலகக் கிண்ணத்தில் அதிக ஓட்டங்கள் அடித்த வீரர்கள் பட்டியலில் விராட் கோலி முதலிடத்தை பிடித்து விடுவார். (4)


# சேவை நலன்

## பாராட்டு



திருமதி
சுலோஜனா
அருந்தவராசா
(பயிற்றப்பட்ட வர்த்தகம்
SLTS - I)

Best Wishes

சேவை விபரம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் | 1988 - 1993 |
| ஆசிரியர் பயிற்சி | பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை | 1993 - 1994 |
| ஆசிரியர் | யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலம் | 1995 - 1996 |
| ஆசிரியர் | மு/ யோகபுரம் மகா வித்தியாலயம் | 1998 - 1998 |
| ஆசிரியர் | கிளி/ பூநகரி மகா வித்தியாலயம் | 1998 - 2002 |
| ஆசிரியர் | யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் | 2002.08.01 - 2002.12.31 |
| ஆசிரியர் | யா/நவாலி மகா வித்தியாலயம் | 2003.01.01 - 2014.01.19 |
| ஆசிரியர் | யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் | 2014.01.20 - 2014.03.16 |
| ஆசிரியர் | யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம் | 2014.03.17 - 2022.10.29 |

திருமதி சுலோஜனா அருந்தவராசா அவர்கள் முப்பத்துநான்கு வருடங்கள் ஆசிரியர் பணியாற்றி இன்று தம் சேவையினின்றும் ஓய்வுபெறும் இவ்வேளையில் எம் மாணாக்கருக்கு வணிகப்பாடத்தினைத் திறம்பட போதித்தும் நூலகப்பணியாற்றியும் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்து உதவியமைக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவிக்கும் அதேவேளை அவரது ஓய்வுக் காலம் நலமும் வளமும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்

(13284)


# இந்திய அணியின் ஆட்டத்தில்

## குறைகள் உள்ளன – கபில்தேவ்

இருபது-20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியில் இரண்டு குறை இருப்பதாக முன்னாள் கப்டன் கபில்தேவ் தெரிவித்துள்ளார். நடப்பு உலகக் கோப்பையில் இந்திய அணி நெதர்லாந்து மற்றும் பாகிஸ்தானை வீழ்த்தி புள்ளிப் பட்டியலில் நான்கு புள்ளிகளுடன் முதலிடத்தில் இருக்கிறது.

இந்த இரண்டு ஆட்டத்திலும் இந்திய அணி வெற்றி பெற்றாலும் சில குறைகள் இருக்கத்தான் செய்கிறது என்று கபில்தேவ் தெரிவித்தார்.

இந்தியாவின் பந்துவீச்சு மெருகேறி வருகிறது. பட்டிங்கில் நாம் கூடுதலாக ஓட்டம் அடிக்க வேண்டும். ஆனால் கடைசிப் பத்து ஓவர்களில் பட்ஸ்மேன்கள் 100 ஓட்டங்களுக்கு மேல் அடித்து சமாளித்து விடுகிறார்கள். அவுஸ்திரேலியாவின் மைதானங்கள் அனைத்தும் பெரியது. இதனால் சுழற் பந்துவீச்சாளர்களுக்கு கூடுதல் சாதகமாக இருக்கும்.

இந்திய அணியின் பந்து வீச்சில் ஆங்காங்கே குறை கள் இருக்கிறது. நெதர் லாந்து போன்ற அணிக்கு எதிராகக் கூட நாம் சரியான திட்டமிடாமல் பந்து வீசினோம். அது போன்ற ஆட்டத்தை நீங்கள் ஒரு பயிற்சியாக நினைக்க வேண்டும்.

சூர்யகுமார் தமக்கு கிடைத்த வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அவர் ஓட்டங்களை வேகமாக அடிக்கிறார். இதனால் அவரை அதிகமாக புகழ வேண்டும். இதே போன்று கப்டன் ரோகித் சர்மா தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்துவது இந்திய அணிக்கு மிகவும் முக்கியமாகும். வெற்றிகர மாக எட்டுவார்கள். அதே போன்று ராகுலும் முக்கிய போட்டிகளுக்கு முன்பு ஓட்டங்களை அடிக்க வேண்டும். விராட் கோலியை பொறுத்தவரை அவர் 20 ஓவரும் நின்று விளையாட வேண்டும். ஏனெனில் அவர் எப்போது வேண்டுமானாலும் வேகமாக அடித்து ஓட்டங்கள் குவிக்கலாம் என மேலும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாட்டில் தமிழர்களுக்கு உள்ள சுதந்திரம் சிங்களவர்களுக்கு இல்லை

## மகிந்த அணியினர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**"இலங்கையின் 25 மாவட்டங்களிலும் சுதந்திரமாக வாழும் தமிழ் மக்களுக்கு உண்மையில் என்ன பிரச்சினை உண்டு? தேசிய இனப்பிரச்சினை என்று அவர்கள் எதைக் கூறுகின்றார்கள்?" என ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்த்தன கேள்வியெழுப்பியுள்ளார்.**

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் நாட்டு மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் நாடகம். அதனால்தான் நான் உள்ளிட்ட 'மொட்டு'வின் ஒரு தொகுதியினர், அந்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

22 ஆவது திருத்தச் சட்டம் மீதான வாக்கெடுப்பு விவகாரத்தை வைத்துக்கொண்டு 'மொட்டு'வுக்குள் பிளவு என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது.

'மொட்டு' அரசு இன்னமும் எழுச்சியுடன் பயணிக்கின்றது. தேர்தல் ஒன்று நடந்தால் அது நிரூபணமாகும்.

தமிழர் தீர்வுக்கான முதல் படியாகவே 22 ஆவது திருத்தச் சட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது என்று ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உண்மையில் நான் கேட்கின்றேன் தமிழர்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை உண்டு? தேசிய இனப்பிரச்சினை என்று அவர்கள் எதைக் கூறுகின்றார்கள்? தீர்வு என்று அவர்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள்?

இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றார்கள். அனைத்து மாவட்டங்களிலும் அவர்கள் வசிக்கின்றார்கள். ஆனால், இந்தச் சுதந்திரம் சிங்களவர்களுக்கு இல்லை. வடக்கு, கிழக்கில் சிங்களவர்கள் சுதந்திரமாக வழிபடக்கூடிய நிலைமை கூட இல்லை" எனத் தெரிவித்தார். (4)

# புதிய நெடுந்தூர பேருந்து தரிப்பிடத்திலிருந்து சேவைகள் ஆரம்பம்




(அராலி)

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்டு யாழ். மாநகர சபையிடம் கையளிக்கப்பட்ட புதிய நெடுந்தூர பேருந்து தரிப்பிடம் S.L.T.B மற்றும் தனியார் பேருந்து நிறுவனங்களின் ஒத்துழைப்பு இல்லாமல் பல காலமாக செயற்படாமல் இருந்த நிலையில் பல முயற்சிகள் எடுத்த போதும் ஒத்துழைப்பு கிடைக்காத நிலையில் காணப்பட்டது.

இந்நிலையில் யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனின் முயற்சியில் யாழ்.- கொழும்பு தனியார் பேருந்துகள் தற்போது குறித்த பேருந்து தரிப்பிடத்தில் இருந்து இயக்கப்படுகிறது.

கடந்த ஒரு மாதமாக பரீட்சார்த்தமாக பேருந்து சேவை நடத்தப்பட்ட நிலையில் பொது மக்களுக்கு புதிய பேருந்து நிலையம் பழைய பேருந்து நிலையத்தை விட் அதிக வசதிகள் கிடைப்பதாகவும் குறிப்பாக மலசலகூட வசதிகள் மற்றும் மழை நேரத்தில் ஒதுங்கி இருப்பதற்கு வசதிகள் இருப்பதாகவும் மகிழ்வுடன் தெரிவித்தனர்.

பேருந்து உரிமையாளர்கள் தாம் தொடர்ந்தும் குறித்த புதிய பேருந்து நிலையத்தில் இருந்து இயங்குவதற்கும் விருப்பம் தெரிவித்துள்ளனர். (4-104)

யாழ்.மாவட்டத்தில்

# கணனி மயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிப்பு



(அராலி)

வட மாகாணத்தில் முதன் முதலாக கணனி மயப்படுத்தப்பட்ட சமுர்த்தி வங்கிகளுக்கான தரவுத்தளம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வை இலங்கை சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் திலக சிறி ஆரம்பித்து வைத்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள கோப்பாய், ஆவரங்கால் மற்றும் உடுப்பிட்டி ஆகிய சமுர்த்தி வங்கிகளே இவ்வாறு கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், கொழும்பு சமுர்த்தி திணைக்கள பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம், மேலதிக செயலாளர் மற்றும் யாழ்.மாவட்ட சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-104)



**நிறைவாழ்வு மையத்தின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ முகாம் கிளிநொச்சி புதுமுறிப்பில் அமைந்துள்ள தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.**

(படம்:-சப்தசங்கரி)

# இராசிபலன்

30.10.2022
ஐப்பசி 13, ஞாயிற்றுக்கிழமை
பஞ்சமி முற்பகல் 8.33 மணிவரை

மூலம் முற்பகல் 10.30 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை

அமிர்த சித்தம்
சூரசம்ஹாரம்
சந்திராஷ்டமம் -மிருகசீரிடம்

வள்ளுவன்



மேஷம்

அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஆசிகளை பெறுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் உருவாகும்.



கடகம்

எதிர்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.



துலாம்

சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் நீடிக்கும்.



மகரம்

தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.



ரிஷபம்

உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பயணங்களால் மனச்சோர்வு ஏற்படலாம், கௌரவக்குறைவான நாள்.



சிம்மம்

பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், தாழ்ந்த சுபவமுண்டு.



விருச்சிகம்

நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.



கும்பம்

எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு.



மிதுனம்

நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், போசன சுகமுண்டு.



கன்னி

கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பயணங்களால் பலனுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.



தனுசு

சிக்கனத்தை கடைப்பிடிக்க முற்படுவீர்கள், சோம்பலை விலக்குவது நல்லது, குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.



மீனம்

மற்றவர்களின் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தில் நம்பிக்கையுள்ள நண்பர்கள் புத்தகங்களே.

# பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தமிழர்களின் துன்பங்களை நீக்க உறுதுணை செய்ய வேண்டும்

## வாழ்த்துச் செய்தியில் கலாநிதி.ஆறு.திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

உலகம் முழுவதும் வாழும் இந்துக்கள் பெருமை கொள்ளக் கூடிய வகையில் ஓர் இந்து மகனாகிய ரிஷி சுனக் பிரித்தானியாவின் பிரதமராகப் பதவி ஏற்றமை குறித்து நாம் மிக மகிழ்ச்சியடைகிறோம் என அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவின் புதிய பிரதமராகப் பதவி ஏற்ற ரிஷி சுனக்கிற்கு அகில இலங்கை இந்துமாமன்றத்தால் அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கைவாழ் இந்து மக்கள் சார்பில் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தங்களுக்கு சமர்ப்பித்துக் கொள்கிறோம். தாங்கள் கோ பூஜை செய்து பகவத் கீதையை சத்திய நூலாகக் கொண்டு பாரம்பரியத்திற்கு அமைய பதவியேற்றமை குறித்து நாம் பூரிப்படைகிறோம்.

பாரத பூமியை பூர்வீகமாகக் கொண்ட தங்கள் குடும்பத்தவர்கள் இன்றுவரை இந்துப் பண்பாட்டு பாரம்பரியங்களை தழுவி தங்களை வளர்த்தமையையிட்டு உங்கள் பெற்றோருக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

பிரித்தானிய தேசம் இலங்கையைக் கைப்பற்றி தங்கள் சட்ட திட்டங்களை இங்கு நெறிப்படுத்தினார்கள். 1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய போதிலும் இதுவரை தமிழர்களுக்கு நீதியான உரிமைகள் வழங்கப்படவில்லை. இவ் விடயம் குறித்து சர்வதேசமே தற்போது நன்கு அறியும்.

பிரித்தானியப் பிரதமராகிய தாங்கள் இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து படும் துன்பங்களை நீக்குவதற்கு தங்களால் இயன்றவரை உறுதுணை செய்ய வேண்டும்.

தாங்கள் பிரித்தானிய நாட்டின் பிரதமராக விளங்கும் காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பத்தில் இலங்கையிலுள்ள புராதன இந்துக் கோவில்களுக்கு சமுகம் தந்து வழிபாடு செய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

# விஷம் வைத்ததில் 35 கோழிகள் பலி

## ஆனைக்கோட்டையில் சம்பவம்



(அராலி)

ஆனைக்கோட்டை - முள்ளிப் பகுதியில் விஷம் வைக்கப்பட்டு 35 கோழிகள் உயிரிழந்துள்ளன. இதில் 3 குடும்பங்களின் கோழிகள் இவ்வாறு உயிரிழந்துள்ளன.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கோழிகளை இழந்த குடும்பத்தின் வீட்டிற்குச் சென்ற நபர் ஒருவர் கோழிகளை விலைக்கு கேட்டுள்ளார். விலைப்பிரச்சினை காரணமாக அவருக்கு கோழிகள் விற்பனை செய்யப்படவில்லை.

அதற்கு அவர் "எனது வயலில் விதைத்த நெல்லினை உங்களது கோழிகள் மேய்கின்றன. எனக்கு கோழிகள் தராவிட்டால் கோழிகளுக்கு விஷம் வைத்து கொலை செய்வேன்" என்று கூறிவிட்டு சென்றதாக பாதிக்கப்பட்ட குடும்பம் கூறுகிறது.

கோழியை இழந்தவர்களின் வீடுகளுக்கு அருகில் குறித்த நபரின் விவசாய காணிகள் உள்ளன. ஆனால் அங்கு உள்ள நெற்பயிர்கள் நன்கு வளர்ந்துள்ள நிலையில் காணப்படுகின்றன. அத்துடன் காணியினுள் வெள்ளமும் காணப்படுகிறது.

ஆகையால் கோழிகள் தண்ணீருக்குள் இறங்காது என்றும் அப்படி இறங்கினாலும் நன்கு வளர்ந்த நெற்பயிர்களை கோழிகள் உட்கொள்ளாது எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர். அத்துடன் தமக்கு இழப்பீடும் நியாயமும்கிடைக்கப்பெற வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (4-104)



கிளிநொச்சியில் இடம்பெற்ற தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கும் விழாவில் கரவெட்டி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் திலீப்குமார் விருதினை பெற்றுக் கொண்டார்.


(படம்: மகாலிங்கம்)

# சூரசம்ஹார பெருவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானத்தின் சூரசம்ஹார பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விசேட பூஜைகளுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

பறை, தாரை, தம்பட்டையுடன் தமிழர் பண்பாட்டு நிகழ்வோடு எம்பெருமான் சட்டநாதர் வீதியை வலம் வருவார். (4)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அமையப்பெறவுள்ள விஞ்ஞான ஆய்வுகூட கணினி அறைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று சனிக்கிழமை காலை பாடசாலை வளாகத்தில் அதிபர் எஸ்.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

(படம்: சுபேசன்)

## வடக்கு அபிவிருத்தி தொடர்பில்

# ஜப்பான் தூதரக அதிகாரிகளுடன் ஆளுநர் கலந்துரையாடல்



(அராலி)

வடமாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பங்கெடுப்புகள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிடோக்கி மிசுகோஷி இணைந்து கொழும்பில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வட்டமேசை கலந்துரையாடலை ஏற்பாடு செய்தனர்.

குறித்த வட்டமேசை கலந்துரையாடலில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிடோக்கி மிசுகோஷி, மாற்றுக் கொள்கைக்கான மையம் கலாநிதி பைக்கிய சோதி சரவணமுத்து, பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க இந்தியாவில் உள்ள இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட, வடக்கு ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் தன்யா ரத்னாவல, கொரிய தூதுவர் சந்துஷ் ஜியோங் வூன்ஜின் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலில் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தூதரக அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர்களுக்கு விளக்கமளித்தார்.

கலந்துரையாடலில் பங்குகொண்ட தூதரக அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தின் பணிப்பாளர்கள் வடமாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி திட்டங்களுக்கு காத்திரமான பங்கை வகிப்பதுடன் விரைவில் வடக்கு மாகாணத்திற்கு விஜயம் மேற்கொள்வதாக தெரிவித்தனர். (4-104)

# பாடசாலை முன்பு கழிவுகளை வீசியவருக்கெதிராக நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புனித ஜோன். பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக மனித மலக்கழிவு உள்ளிட்டவற்றை வீசியவர் தொடர்பில் பல்வேறு தரப்பிடமும் முறையிடப்பட்டுள்ளன.

பாடசாலை முன்பாக நேற்றைய தினம் பம்பஸ் உள்ளிட்ட கழிவுகள் வீசப்பட்டிருந்த நிலையில் பாடசாலைக்கு அருகில் வசிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.

அது தொடர்பில் மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மாநகர சபை சுகாதார ஊழியர்கள் அவற்றை அகற்றும் போது, அதனுள் மோட்டார் சைக்கிள் காப்புறுதி அட்டை ஒன்று மீட்கப்பட்டது.

அதன் அடிப்படையில் கழிவுகளை அவரே வீசி இருக்கலாம் என சந்தேகிப்பதனால் அவருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 368

Viber 076 636 3378



# பிராக்குக் காட்டும் அரசியலை நம்பினால் நாம் படுகுழியில் வீழ்வது நிச்சயம்

## தமிழினத்துக்கான தீர்வு சர்வதேசத்தினூடே தர வேண்டும்

• அபிமன்யு

பிராக்குப் பார்த்தல், பிராக்குக் காட்டுதல் என்று தமிழில் ஒரு சொல்லாடல் உண்டு.

அதாவது ஒரு குறிப்பிட்ட விடயத்தில் கவனம் செலுத்தாது அசண்டையீனமாக இருந்தலையே இந்தப் பிராக்குப் பார்த்தல் என்ற சொல் விளக்கி நிற்கும்.

இந்தப் பிராக்குப் பார்த்தல் சொல்லாடலுக்கும் தமிழினத்திற்கும் ஒரு தொடர்பு உண்டு.

தமிழினத்திற்கான தீர்வை தருவதாக ஆட்சிப் பீடமேறும் பேரினவாத அரசுகள் பிராக்குக் காட்டும் செயற்பாட்டிலே தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.

தமிழினமும் அவர்களின் இக் கதையை காலம் காலமாக நம்பிக் கொண்டிருப்பதுதான் வேதனை.

இதற்கு எம் தமிழ் அரசியல் தலைமைகளும் ஒரு காரணமாகின்றன.

தமிழினத்தின் ஆயுதப் போராட்டத்தை மழுங்கடிக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்ட சில செயற்பாடுகளில் ஈடுபட்ட பேரினவாத அரசுகள் எம் தமிழ் தலைவர்களை தமது கைக்குள் போட்டுக் கொண்டனர் என்பது தான் கசப்பான உண்மை. இதன் விளைவு தமிழினம் முழுமையாய் அழிந்து போனதான வரலாற்றையே கொடுக்கப் போகின்றது என்பதை நாம் புரிந்து கொண்டேயாக வேண்டும்.

எப்போது எதைப் பேசினால் தமிழினத்திடம் எடுபடும் என்பதை நன்கு அறிந்து வைத்திருக்கும் தமிழ்த் தலைவர்கள் அந்த நேரத்தில் மாத்திரம் வீர வசனங்களை பக்கம் பக்கமாய் எடுத்து விடுவதில் முனைப்புக் காட்டுவர்.

அதன் பின்னால் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் வரவேண்டிய நேரத்தில் வந்து நின்று தாம் தமிழினத்தின் விசுவாசிகள் என்று கூறிக் கொள்வார்கள்.

சுருங்கச் சொன்னால் மழைக் காலத்தில் முளைக்கும் காளான்கள் போலத்தான் இவர்களும் இவர்கள் பேசும் வீர வசனங்களும்.

இதை நாம் இங்கு கூறும் போது பலருக்கு கோபம் வரலாம். ஆனால் அதுதான் வரலாற்று உண்மை.

> “நாம் தமிழ் தரப்புக்களுடன் பேசி அவர்களுக்கான தீர்வை வழங்குகின்றோம் என்று சர்வதேசத்தை ஏய்க்காட்டி தமிழினத்திற்கு பிராக்குக் காட்ட நினைக்கும் மண் குதிரைகளை நம்பி கடலில் இறங்குவது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.”

எத்தனை தசாப்தங்கள் கடந்து விட்டன. தமிழினத்திற்கான தீர்வைத் தர எவரும் தயாராக இல்லை. ஆனால் இந்த மண் குதிரைகளை இன்னும் நம்பிக் கொண்டிருக்கும் எம் அரசியல் தலைவர்களை என்ன வென்று கூறி விட முடியும்.

நடந்து முடிந்த ஐ.நாவின் அமர்வில் இலங்கை பொறுப்புக் கூற மேலும் கால அவகாசம் வழங்கப்பட்டிருக்கும் இவ் வேளையில் தமிழினத்திற்கான தீர்வைத் தர தாம் தயார் என்ற கோணத்தில் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் பேசத் தலைப்பட்டுக் கொண்டனர்.

இது சர்வதேசத்தை ஏமாற்றும் யுத்தி என்பதை அறியாமல் இருக்க தமிழினம் அவ்வளவு முட்டாள்கள் அல்ல.

ஆம், புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் ஊடாக தமிழினத்திற்கான தீர்வை வழங்க தாம் மிகவும் உன்னிப்பாக செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவும் தன் பங்குக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் அண்மையில் பேசியிருக்கிறார்.

தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இது அரிய சந்தர்ப்பம்.

கிடைத்த இந்தச் சந்தர்ப்பத்தை தமிழ்த்தேசிய கூட்டைப்பினர் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தவற விடக்கூடாது.

புதிய அரசியலமைப்பு, தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதி திறந்த மனதுடன் அனைவருடனும் பேச ஆரம்பித்துள்ளார்.




எனவே தமிழ்த் தரப்பினர் கட்சி பேதமின்றி மக்களின் நலன் கருதி ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.

பிரதமரின் கூற்று வரவேற்கத்தக்கது. ஆனால் இப்போது அவ்விடயம் எதற்காக பேசப்படுகிறது என்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடியில் [illegible] இலங்கைக்கு உதவ [illegible] விரித்த போதிலும் இந்தியா மிகப் பெரிய உதவிகளை செய்து வருகிறது.

அத்துடன் ஐ.நாவில் இலங்கை தொடர்பில் பேசிய இந்தியா 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை உடன் இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும். இதுவே இனங்களுக்கிடையிலான முரண்பாட்டை தீர்க்கவல்ல தீர்வு என்று கூறியிருக்கிறது.

அத்துடன் ஐ.நாவின் இலங்கைக்கான கால அவகாசமும் இலங்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த இக்கட்டான நேரத்தில் தமிழினத்திற்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தரப்புகளுடன் அரசு பேசுமாக இருந்தால் இது சர்வதேசத்தை பிராக்காட்டும் செயலாக அமையும்.

தவிர இந்தியாவினால் அமுல்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்த சட்ட மூலத்தை பற்றிய கதையை மறப்பிக்க செய்யும் செயற்பாடாகவும் இது இருக்கும்.

நாம் தமிழ்த் தரப்புக்களுடன் பேசி விட்டோம். அவர்கள் குறித்த விடயம் தொடர்பில் எம்முடன் பேசியிருக்கிறார்கள்.

எனவே தமிழ்த்தரப்பினரின் விருப்பத்திற்கு அமைய தமிழினத்திற்கான தீர்வை வழங்குகின்றோம் என சர்வதேசத்தை தாக்காட்டிக் கொண்டு 13 தொடர்பில் இனிப் பேசத் தேவையில்லை என இந்தியாவுக்கும் மறைமுகமாக கூறி விடலாம் என்பதே பெரும்பான்மை ஆட்சியாளர்களின் சிந்தனை.

இதை உணர்ந்து கொள்ளாமல் நாம் இலங்கை ஆட்சியாளர்களுடன் பேசுவோமாக இருந்தால் அது யானை தன் கையினால் தனக்குத் தானே மண் அள்ளிப் போடுவதற்கு ஒப்பானதாகும். இங்கு நாம் முன்வைக்க வேண்டியதெல்லாம் தமிழினத்திற்கான தீர்வு முக்கியமானது. அத்துடன் இறுதி யுத்தத்தில் நடந்த போர்க்குற்ற மீறல்களுக்கான பொறுப்புக் கூறல்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன? நீண்ட காலமாக சிறைகளில் வாடும் அரசியல் கைதிகளுக்கான விடுதலை.

இவற்றுடன் தமிழினம் தனது தாய் மண்ணில் முழுச் சுதந்திரத்துடனும் வாழ்வதற்கான ஏற்பாடுகள். இவை அனைத்தும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அவை சர்வதேசத்தின் ஊடாக வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு சர்வதேசத்தின் அனுசரணையில் தமிழினத்திற்கான தீர்வைப் பெற்றுக்கொள்ளலாமே தவிர ஆட்சியாளர்களை நம்பினால் இவ்வளவு காலமும் நடந்த அதே பிராக்குக் காட்டும் செயலையே மீண்டும் மேற்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் மூப்பரைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

அப்பு மாஸ்ரர் என்று நாம் எல்லோரும் அன்பாக அழைக்கின்ற ஓய்வுநிலை ஆசிரியர் தனபாலன் அவர்கள் காலமாகி விட்டார்.

வேலணை - சரவணையைச் சொந்த இடமாகக் கொண்ட தனபாலன் பாடசாலைகளுக்கு வெள்ளிக்கிழமைகளில விடுமுறை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை பல வருடங்களாக முன்வைத்து அதற்காகக் குரல் கொடுத்தவர்.

மாணவர்கள் ஆலய வழிபாடு செய்வதற்கு வெள்ளிக்கிழமை விடுமுறை அவசியம் என்ற அவரின் சிந்தனை இன்றைய சூழ்நிலையில் உணரப்பட்டுள்ளது.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து உரையாற்றிய பண்டிதர் பரமலிங்கம், இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி. அருள்நங்கை சண்முகநாதன் அவர்களின் மரணச் செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். இந்து நாகரிகத்தை மிகச் சிறப்பாகக் கற்பித்த திருமதி. அருள்நங்கை அவர்களின் கல்விப் பணி போற்றுதலுக்குரியது. அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர். அந்நேரம் பார்த்து மூப்பரும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

என்ன மூப்பர் இண்டைக்குப் பிந்திப் போயிற்று. என்ன சங்கதி சாத்திரியார் சதாசிவம் விசாரித்தார்.

**மூப்பர்:** திடீரென்று ஒருக்கா கொழும்புக்குப் போக வேண்டி வந்திட்டுது. கொழும்புக்குப் போய் திரும்ப யாழ்ப்பாணத்திற்கு ரயில் வண்டியில வந்து சேர்ந்தன்.

ஆனால் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில இருந்து யாழ்ப்பாண பஸ் நிலையத்திற்குப் போறதுக்கு ஆட்டோவைத் தவிர வேறு ஒரு வாகனமும் இல்லை.

ஆட்டோவும் யாழ். பஸ் நிலையத்திற்கு வர 700 ரூபாய் எடுக்கினம். அதால நடந்து பஸ்ஸ்ராண்டுக்குப் போனதில கால் உழைஞ்சு போய்ச்சுது.

**சிறாப்பர்:** மூப்பர் சொல்லுறது உண்மை தான். யாழ்.புகையிரத நிலையத்தில இருந்து யாழ்.பஸ் நிலையத்திற்குச் செல்வதற்கு ஆட்டோ பிடிக்கிறதென்பது அவ்வளவு பொருத்தமில்லை.

யாழ்.புகையிரத நிலையத்தில இருந்து வீடுகளுக்குச் செல்வதாயின், ஆட்டோ பிடிக்கிறது தகும்.

ஆனால் பஸ் நிலையத்திற்கு போறதுக்கு...


**வாத்தியார்:** ஏன் சிறாப்பர் நீங்கள் இதைச் சொல்லுறியள், 1986 ஆம் ஆண்டுக்கு முன்பு யாழ்.புகையிரத நிலையத்தில ஒரு பஸ் வண்டி காத்து நிற்கும் யாழ். பஸ் நிலையத்திற்குச் செல்பவர்களை ஏற்றிக் கொண்டு செல்வதற்கு.

அதுமாதிரி வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் கோண்டாவில் சாலையும் இது விடயத்தில கரிசனை எடுத்தால், புகையிரத வண்டி யாழ்ப்பாணத்தை வந்தடையும் நேரத்தில ஒரு குறுகிய சேவையை யாழ்.புகையிரத நிலையத்திற்கும் யாழ்.பஸ் நிலையத்திற்குமிடையில நடத்தலாம்.

**விதானையார்:** வாத்தியார் சொல்லுறது சரியான ஐடியா. அந்த பஸ் வண்டி யாழ்.புகையிரத நிலையத்தில இருந்து கொழும்புக்கு ரயில் புறப்படுகின்ற நேரத்திற்கு முன்னதாக யாழ். பஸ் நிலையத்தில இருந்து வெளிக்கிட்டால், ரயிலுக்குப் போறவியளும் அதில ஏறுவினமல்லோ.

இவ்வாறு விதானையார் கூறியதும் அப்ப இது தொடர்பில கோண்டாவில் சாலை நடவடிக்கை எடுக்க வேணும் எண்டொரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் கூற, மேற்படி தீர்மானம் ஆலடியில ஏகமனதாக நிறைவேறியது. தீர்மானம் நிறைவேறியதைத் தொடர்ந்து ஆலடியில நிலவிய அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.



**யாழ்.புகையிரத நிலையத்திலிருந்து யாழ்ப்பாண பஸ் நிலையம் வரை...**

**கங்காணி:** பிரிட்டனின் பிரதமராகப் பதவியேற்றுள்ள ரிஷி சுனக்கிற்கு ஆலடியில வாழ்த்துத் தெரிவிக்க வேணும்.

**பண்டிதர்:** உண்மை தான். பிரிட்டனின் பிரதமர் ரிஷி சுனக் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இந்து சமயத்தவர்.

அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட போது, பகவத் கீதைப் புத்தகத்தில சத்தியம் செய்து பதவியைக் ஏற்றுக் கொண்டவர்.

தன்னுடைய மூத்த மகளுக்கு கிருஷ்ணா என்று பெயர் வைத்தவர். அத்தகைய ஒருவர் பிரிட்டனின் பிரதமராகப் பதவியேற்றிருப்பதனை ஈழத் தமிழர்கள் அனைவரும் வரவேற்க வேணும்.

**சாத்திரியார்:** சில வேளை நாங்கள் சைவம், அவர் இந்து எண்டும் சிலபேர் சொல்லுவினமோ.

**பண்டிதர்:** சொல்லுவினம், சொல்லுவினம். சைவத்தையும் வைஷ்ணவத்தையும் பிரிச்சால் இந்து சமயத்தின்ர வலிமை குறையுமல்லோ. அப்படியானவர்கள் நாங்கள் சைவம், அவர்கள் வைஷ்ணவம் என்று பிரிவிடல் செய்வினம்.

இந்தப் பேதமையை வளர்க்கிறதில ஒரு தரப்பு மும்முரமாக இருப்பதாலதான் பொன்னியின் செல்வன் படத்தில சைவம்-வைஷ்ணவம். சிவன்-கிருஷ்ணன் எல்லாம் ஒன்று என்ற தத்துவம் மிகச் சிறப்பாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

**வாத்தியார்:** காலத்திற்குக் காலம் இப்படியான பேதமைகளை உருவாக்கவும் உருவாக்கியதை வளர்க்கவும் ஒரு தரப்பு தோற்றம் பெற்றுக் கொண்டே இருக்கும்.

ஆனால் பிரிட்டனின் பிரதமராக ஓர் இந்து மதத்தவர் வந்திருப்பது, அதிலும் பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக இருந்த இந்திய தேசத்தின் வம்சத்தவர் பிரிட்டனின் பிரதமராக இருப்பது எங்கள் எல்லோருக்கும் பெருமை.

**மூப்பர்:** ஒரு பகுதியினர் இஞ்ச யாழ்ப்பாணத்தில மதமாற்றம் செய்ய, பிரிட்டனில ஓர் இந்து பிரதமராகி விட்டார். பார்த்தியளோ! இதுதான் சொல்லுறது தேவையில்லாத வேலையை ஒருவன் செய்வானாயின், தேவையுள்ள வேலையை அவனால் செய்ய முடியாமல் போகுமெண்டு.

இவ்வாறு மூப்பர் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீபாவளி அன்று பெய்த கடும் மழை யில் யாழ்நகர் வெள்ளக்காடானது. ஆனாலும் யாழ்.மாநகர ஊழியர்க ளின் கடும் உழை ப்பினால் வெள்ளம் வழிந்தோடிவிட்டதே.

**விஜயரட்ணம் யாழ்ப்பாணம்**

**வால்மீகியில் இருந்து பொன்னியின் செல்வன் வரை இந்திய ஞானிகள் இலங்கையைத் தேர்ந்தெடுப்பது ஏன் வியாசரே?**

உலகத்தின் தோற்றம் பற்றிய வரலாற்றில் இந்தியாவைத் தவிர்த்து ஆய்வுகள் செய்து விட முடியாது.
அந்தளவிற்கு மனித தோற்றத்தின் மிகத் தொன்மையான வரலாறு பொதிந்து கிடக்கிறது. இந்தியாவின் வரலாற்றை உற்று நோக்கினால் அதில் இலங்கையைத் தவிர்த்து பார்த்துவிட முடியாது.
இந்திய வரைபடத்தில் கூட இலங்கை இருக்கும். ஆகவே தொன்மை வரலாறு கொண்ட இலங்கையை இந்திய ஞானிகளால் பிரித்துப் பார்க்க இயலவில்லை.
இலங்கை - இந்திய உறவை தொப்புள் கொடி உறவு என்று கூறுவதையும் இங்கு நினைவில் கொள்வோம்.

**இதழினி புலோலி**

**புண்படுத்தப்பட்ட இதயம் மேலும் மேலும் ஏன் காயங்களைச் சுமக்கிறது?**

ஒருவருக்கு துன்பத்தைக் கொடுக்கும் கடவுள் அதை தொடர செய்யமாட்டார்.
தொடரும் துன்பத்திற்கு முடிவு உண்டு. அந்த முடிவு இன்பமானதாக இருக்கும். துன்பத்தில் வரும் இன்பம் மன நிறைவையும் ஆனந்தத்தையும் தரும்.
அவ்வாறு இருந்தால் தான் வாழும் வாழ்க்கை ஒரு விருப்பிற்குரியதாய் அமையும். பெற்றோர்களின் பணத்தில் உண்பதிலும் பார்க்க கஷ்டப்பட்டு வியர்வை சிந்தி உழைத்த பணத்தில் உண்பதில் திருப்தி இருக்கின்றதல்லவா. அதுபோலத் தான் இதுவும்.

**தாரு அடம்பன்**

**உதவி செய்யாவிடினும் உபத்திரம் தராதிருப்பது நன்றல்லவா வியாசரே?**

அது ஒரு ரகமாக இருந்தாலும் இப்போது பலர் செய்யும் உதவியை படம் பிடித்து பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதில் மும்முரம் காட்டுகின்றனரே அதை எண்ணவென்று சொல்ல. உள்ளங்கையால் கொடுப்பது புறங்கைக்குத் தெரியக் கூடாது என்றார்கள் நம் முன்னோர்கள். ஆனால் இன்றோ நகக் கண்ணளவு உதவியைச் செய்து விட்டு அதை உலக றியச் செய்வதை நினைக்கும் போது இதை விட சிறுமைத் தனம் வேறேதும் உண்டோ என்று சொல்லத் தோன்றுகிறது.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**மோகன் கொக்குவில்**

**தீபாவளி அன்று பெய்த கடும் மழையில் யாழ்நகர் வெள்ளக்காடானது. ஆனாலும் யாழ்.மாநகர ஊழியர்களின் கடும் உழைப்பினால் வெள்ளம் வழிந்தோடிவிட்டதே.**

அனர்த்த நேரங்களில் யாழ்.மாநகரத் தொழிலாளர்களின் பணி மிக உன்னதமானது.
கடந்த வாரம் பெய்த கடும் மழையினால் யாழ்நகர் வெள்ளக்காடானது. இருப்பினும் மாநகர சபை ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவை அந்த வெள்ளத்தை அப்புறப்படுத்த முக்கிய காரணியாக அமைந்திருந்தது. எம்மவர்களின் பொறுப்பின்றிய செயற்பாடுகளை நினைக்கும் போது வேதனையாக இருக்கும்.
கழிவு நீர் வாய்க்கால்களுக்குள் குப்பைகளைக் கொட்டிவிடுவது எந்த வகையிலும் அறம் அன்று. அது எமது சூழலைப் பாதிப்பதுடன் எம் மண்ணின் அழகையும் கெடுக்கும்.



மனதை அமைதிப்படுத்த ஏதும் வழி இருந்தால் கூறுங்கள் வியாசரே?

**மேகதூதுவன் இன்பசிட்டி**

**நீங்கள் ரசித்து சிரித்த ஜோக் ஏதும் இருந்தால் கூற முடியுமா? நாங்களும் கேட்டுச் சிரிக்கின்றோம்.**

நீண்ட நேரமாக மனதுருகி கடவுளைக் கும்பிட்ட நம்மாளின் முன் கடவுள் தோன்றி, பக்தனே உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றார். எனக்கு அழகான மனைவி வேண்டும் என்றான் நம்மாள். நீ இந்து என்றால் அனுஸ்காவைத் தருகிறேன். கிறிஸ்தவம் என்றால் ஜெனிலியாவைத் தருகிறேன். முஸ்லிம் என்றால் கர்த்தினாவைத் தருகிறேன். உன் பெயர் என்ன என்றார் கடவுள்.
அப்துல் நாராயண பெர்னாண்டோ என்றான் நம்மாள். கடவுளுக்கு தலை சுற்றியது.

**மதுவன் மீசாலை**

**ஒரு வருடத்திற்குள் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பேன் என ஜனாதிபதி கூறியதை நம்பலாமா?**

தமிழினத்திற்கான தீர்வை யார் தந்தாலும் அது வரவேற்கத்தக்கதே.
ஆனால் அவர்களால் தரப்படும் தீர்வு தமிழினத்தின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக அமைந்திருக்க வேண்டும்.
மாறாக அது தமிழினத்தை ஏமாற்றுவதாய் அமைந்துவிட்டால் இந்த நாட்டில் அமைதி ஏற்படாது.

**சுதன் குப்பிழான்**

**நாடு சாம்பலாகிப் போய்விட்டது. அந்தச் சாம்பலில் இருந்து எழுந்து வருவார்களாமே ராஜபக்ஷக்கள்?**

அப்படி அவர்கள் சாம்பலில் இருந்து எழுந்து வர, அவர்களை சிங்கள மக்கள் வரவேற்பார்களானால் அவர்கள் தாராளமாய் எழுந்து வரலாம்.
இல்லாதிருக்கும் புலிப் பூச்சாண்டியைக் காட்டினாலே போதும். அதன் பின் சிங்கள மக்கள் அவர்களை ஆதரிக்கத் தொடங்கி விடுவார்கள்.
ஏனென்றால் தாம் வடக்கு- கிழக்கிற்கு பயமின்றி வந்து செல்வதற்கு ராஜபக்ஷக்களே காரணம் என அவர்கள் பலமாக நம்புகின்றார்கள்.

**ராஜ் மாதகல்**

**மனதை அமைதிப்படுத்த ஏதும் வழி இருந்தால் கூறுங்கள் வியாசரே?**

குருவே ஞானம் பெற என்ன செய்ய வேண்டும் என்றான் சிஷ்யன்.
தினசரி கொஞ்சம் மந்திரங்களை உச்சரி. கூடவே இரண்டு வாழைப் பழங்களைச் சாப்பிடு என்றார் குரு.
சிஷ்யன் கேட்டான் கப்பல் பழமா கதலிப் பழமா சாப்பிட வேண்டும் குருவே.
கடுப்பாகிய குரு சொன்னார் உனக்கு இந்த ஜென்மத்தில் ஞானம் வரவே வராது என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: ஆடிப்பெருக்கு
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: ஏ.எம். ராஜா
பாடியவர்: பி.சுசீலா



காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா? – இந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை சேர்க்கவா
காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா?

பொருளோடு வாழ்வு உருவாகும் போது
புகழ் பாடப் பலர் கூடுவார் – அந்தப்
புகழ் போதையாலே எளியோரின் வாழ்வை
மதியாமல் உரையாடுவார் – ஏழை
விதியோடு விளையாடுவார் – அன்பை
மலிவாக எடை போடுவார் – இந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை போடவா?

காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா?

அழியாது காதல் நிலையானதென்று
அழகான கவிபாடுவார் – வாழ்வில்
வளமான மங்கை பொருளோடு வந்தால்
மனம் மாறி உறவாடுவார்
கொஞ்சு?ம் மொழி பேசி
வலைவீசுவார் – தன்னை
எளிதாக விலை பேசுவார் – இந்தக்
கனிவான பாடல் முடிவாகு முன்னே
கனவான கதை கூறவா – பொங்கும்
விழி நீரை அணை போடவா?

காவேரி ஓரம் கவி சொன்ன காதல்
கதை சொல்லி நான் பாடவா – உள்ளம்
அலைமோதும் நிலை கூறவா?

# குகையில் வாழ்ந்தவர் ஜனாதிபதியான கதை

தனது இளமைக் காலத்தில் வீடின்றி குகையில் வாழ்ந்த ஜி ஜின்பிங், இன்று ஒட்டுமொத்த சீனாவையும் தனது ஒற்றைப்பிடியில் வைத்திருக்கிறார். சீன ஜனாதிபதியாக மூன்றாவது முறையாக முடிசூடிக்கொள்ளவிருக்கிறார் ஜின்பிங். சர்வதேச அரசியலிலும் தன்னைத் தவிர்க்க முடியாத தலைவராக மாற்றிக்கொள்ள முயன்று வருகிறார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஆட்சியிலும் தன்னை சக்தி வாய்ந்த தலைவராக எப்படி மாற்றிக்கொண்டார் ஜின் பிங்?

'சீனப் புரட்சியின் தந்தை' எனப் போற்றப்படும் மா சே துங்கின் நெருங்கிய நண்பரான ஜி சோங்ஷூனுக்கு 1953 இல் மகனாகப் பிறந்தார் ஜி ஜின்பிங். மா சே துங், சீன கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்தபோது, அவர் உடனிருந்தவர்களில் சோங்ஷூனும் ஒருவர். 1968இல், சீனப் புரட்சிக்கு எதிராகச் செயற்பட்டதாகச் சொல்லி கட்சியில் இருந்து சோங்ஷூனை நீக்கியதோடு, அவரைச் சிறையிலும் அடைத்தார் மா சே துங். மேலும், சோங்ஷூனுடன் அவரது குடும்பம் எந்தவிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டது. இதையடுத்து, அரச அதிகாரிகளின் பிள்ளைகள் படிக்கும் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டு, லியாங்ஜியாஹே என்ற கிராமத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார் ஜின்பிங். அந்தக் கிராமத்திலுள்ள சிறிய குகையில் ஜின்பிங்கின் குடும்பம் வாழ்ந்தது. அங்குள்ள பள்ளியில் படித்துக் கொண்டே விவசாய வேலைகளையும் செய்துகொண்டிருந்தார் ஜின் பிங்.

1972 ஆம் ஆண்டில், 'சிறையில் அடைக்கப்பட்டவர்கள் குடும்பத்தோடு இணையலாம்' என்ற உத்தரவைப் பிறப்பித்தார் அப்போதைய சீன ஜனாதிபதி என்லாய். இதனால், தந்தையோடு மீண்டும் இணைந்தார் ஜின் பிங். இள வயதில் சீன கம்யூனிஸ்ட் கட்சியில் சேர பல முறை விண்ணப்பித்தார் ஜின் பிங். தந்தையின் சிறைத் தண்டனையைக் காரணம் காட்டி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 1974 ஆம் ஆண்டு, அவர் 10ஆவது முறையாக அனுப்பிய அவரது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கட்சியில் சேர்ந்த பிறகு, கெமிக்கல் இன்ஜினீயரிங் இல் பட்டம் பெற்றார். கட்சித் தொண்டர் என்ற நிலையிலிருந்து படிப்படியாக முன்னேறி, ஃபூஜியான் மாகாண அரசியலில் கவனம் [illegible] சீன கம்யூனிஸ்ட் கட்சியில் ஓய்வுபெற்ற தலைவர்களும் அதிகாரம் செலுத்துவது வழக்கம். அதைமீறி புதிதாகக் கட்சிக்குள் வருபவர்கள் வளர்வது மிகக் கடினம். ஆனால், தனது தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி தனக்கான ஆட்களைக் கட்சிக்குள் திரட்டினார் ஜின்பிங். ஆரம்ப காலத்தில் கட்சியிலுள்ள அனைவருடனும் சமரசம் செய்துகொள்ளக் கூடிய தலைவராக ஜின்பிங் இருந்ததால், நிர்வாகிகள் மத்தியில் நற்பெயர் பெற்றார்.

2012 நவம்பரில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜின் பிங், 2013 மார்ச் மாதத்தில் முதன்முறையாக சீன ஜனாதிபதியானார். ஆட்சிக்கு வந்தவுடன் 'ஊழல் ஒழிப்பு' பிரசாரத்தை மேற்கொண்டார். சீன மக்கள் விடுதலை இராணுவத்தில், தனக்கு எதிராகத் திரும்பக்கூடியவர்களைப் பட்டியலிட்டு, அவர்களைக் களையெடுத்தார்.

அரசியல், ஊழியர்கள், தளவாடங்கள், ஆயுதங்கள் என நான்கு தலைமையகங்களைக் கொண்டிருந்தது சீன மக்கள் விடுதலை ராணுவம். 2015 இல், இதை 15 சிறிய முகமைகளாக மாற்றினார். தனக்கெதிராக இராணுவக் கிளர்ச்சி ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே இராணுவக் கட்டமைப்புகளை அவர் மாற்றி அமைத்ததாகச் சொல்கிறார்கள். கட்சிக்குள் தனக்கு எதிராக நிற்பவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவர்களைச் சிறைக்கு அனுப்பினார்.



ஜின் பிங் ஆட்சிக்கு வந்த பிறகு சுமார் 47 இலட்சம் பேரை விசாரணை செய்திருக்கிறது ஊழல் தடுப்புப் பிரிவு.

"ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகளைத் தனது சுயலாபத்துக்காகவே பயன்படுத்திவருகிறார் ஜின்பிங். சீன கம்யூனிஸ்ட் கட்சியில் மொத்தமுள்ள 31 மாகாணச் செயலாளர்களில், 24 பேர் ஜின்பிங்கின் விசுவாசிகள். மாகாண நிலைக்குழுவிலுள்ள 281 பேரில், பெரும்பாலானவர்கள் ஜின்பிங்கால் வளர்ச்சி பெற்றவர்கள். தன் விசுவாசிகளை அதிகாரத்தில் வைத்திருப்பதால் தான், கட்சிக்குள் இருக்கும் எதிர்ப்புகளையும் மீறித் தொடர்ந்து சீனாவின் ஜனாதிபதியாகச் செயற்பட்டு வருகிறார் ஜின்பிங்" என்கின்றனர் சீன அரசியல் நோக்கர்கள்.

### மூன்றாவது முறை ஜனாதிபதி

சீனாவில், ஒருவர் இரு முறைக்கு மேல் ஜனாதிபதியாக இருக்கக் கூடாது என்ற சட்டம் 1990 களில் கொண்டு வரப்பட்டது. 2018 இல் இரண்டாவது முறையாக ஜனாதிபதி பதவியேற்றவுடனேயே இந்தச் சட்டத்தை நீக்கினார் ஜின்பிங். இந்த நிலையில், கடந்த வாரம் நடந்து முடிந்த சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது மாநாட்டின் இறுதிநாளில், ஜி ஜின் பிங் முன்னிலையிலேயே அவர் அருகில் அமர்ந்திருந்த முன்னாள் ஜனாதிபதி ஹூ ஜிண்டாவோ காரணம் ஏதும் சொல்லப்படாமல் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். அதன் பிறகு, ஜின் பிங் மூன்றாவது முறையாகக் கட்சியின் பொதுச் செயலாளராக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டார். மேலும், மூன்றாவது முறையாக ஜனாதிபதி நாற்காலியிலும் அமரவிருக்கும் ஜின்பிங் வாழ்நாள் முழுவதும் சீன ஜனாதிபதியாக இருக்கவும் திட்டமிடுவதாகச் சொல்லப்படுகிறது.

ஜின்பிங் ஆட்சியில், சீனாவின் தொழில் வளர்ச்சி, மாசு கட்டுப்பாடு உள்ளிட்ட துறைகளில் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இருந்தும், கடந்த சில ஆண்டுகளாக சீனப் பொருளாதாரம் வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது. மேலும், கொரோனாத் தடுப்பு நடவடிக்கை என்ற பெயரில் ஜின் பிங் கொண்டுவந்த கடுமையான கட்டுப்பாடுகளாலும் அவரது சர்வாதிகாரப் போக்காலும் மக்களிடையே எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது. தலைநகர் பீஜிங்கில், 'சர்வாதிகாரியை நீக்கிவிட்டு, தேர்தல் மூலம் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்று பேனர்கள் ஏந்திய போராட்டங்கள் தலையெடுத்திருக்கின்றன.

இந்தப் போராட்டம் அடுத்த கட்டத்துக்குச் சென்றால், ஜின்பிங்கின் அதிகாரம் ஆட்டம் காண்பது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவிடமிருந்து அலாஸ்காவை வாங்கிய அமெரிக்கா

## விலகாத தங்கப் பத்திர மர்மம்!

சரித்திரம் என்பது எப்போதுமே பல மர்மாங்களை உள்ளடக்கியதாகத்தான் இருந்து வந்திருக்கிறது. சில சரித்திர ஆய்வாளர்கள் பகிர்ந்துகொள்ளும் தகவல்கள் நம்புவதற்குக் கடினமானவை. அதுவும் செவிவழிச் செய்திகள் இவற்றுடன் கலந்து நம்மை அடையும்போது நம்பகத்தன்மை மேலும் கொஞ்சம் குறையும். அதேசமயம் பொய்கள் என்று ஒதுக்க முடியாத அளவுக்கு அவற்றில் பல்வேறு கோணங்கள் இருக்கும். அப்படிப்பட்ட சுவாரஸ்யமான அதிசயங்களையும் மர்மங்களையும் விநோதங் களையும் இந்தத் தொடர் விபரிக்கிறது.

ரஷ்யப் பேரரசுக்கும் அமெரிக்காவுக்கும் நடுவே ஒருகாலத்தில் அனாதையாக அமைந் திருந்த தீவு அலாஸ்கா. அப்போது ஓரளவு பழங்குடியின மக்கள் மட்டுமே அங்கு வாழ்ந் தனர். அது அதிக குளிர் கொண்ட பகுதி.




1741 இல் புதிய நிலப்பகுதிகளின் கண்டு பிடிப்பாளரான வைடஸ் பேரிங் என்பவர் அங்கு விஜயம் செய்தார். அலாஸ்காவில் நிறைய நீர் நாய்கள் மற்றும் சீல் விலங்குகள் இருப்பதை உலகுக்குத் தெரியப்படுத்தினார். உடனே முன்னாள் ரஷ்யப் பேரரசு அலாஸ்கா பகுதிக்குச் சொந்தம் கொண்டாடியது. அதைத் தன்வசம் ஆக்கிக் கொண்டது.

1867 இல் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி ரஷ்யப் பேரரசில் உண்டானது. அப்போது அங்கே ஆண்டது மன்னர் இரண் டாம் அலெக்சாண்டர். அலாஸ்கா பகுதியைக் கட்டிக்காப்பது பெரும் பொருளாதார இழப்புக்கு வழிவகுக்கிறது என்று அவருக்குத் தோன்றி யது. அதேசமயம் இங்கிலாந்தும் அமெரிக் காவும் அலாஸ்காவை தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவர விரும்புவதையும் ரஷ்யப் பேரரசு அறிந்திருந்தது. அந்த இரண்டு நாடுகளும் ஒரே சமயத்தில் தன் மீது போர் தொடுத்தால் அதை அப்போதைக்குச் சமாளிப்பது மிகக் கடினம் என்று கருதினார் மன்னர்.

அலாஸ்காவை நல்ல விலைக்கு விற்றால் என்ன? இப்படி ஒரு கருத்து ரஷ்யப் பேரரசின் அதிகாரிகளிடையே பரவ, அந்தத் தகவல் வெளியே கசிய விடப்பட்டது.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஸ்வர்ட் அலாஸ்காவை அமெரிக்கா வாங்கிக்கொள்ள வேண்டும் என்று விரும்பி னார். வருங்காலத்தில் அலாஸ்கா விலை மதிப்பில்லாத பகுதியாக மாறும் என்று அவர் நம்பினார். (அவர் நம்பிக்கை பின்னர் சரியா னது. இன்று அலாஸ்கா பெற்றோலிய வளம் நிரம்பிய ஒரு பகுதி). ஐம்பது இலட்சம் அமெரிக்க டொலர்களை விலையாகக் கொடுப்பதாகக் கூறினார் அவர்.

ரஷ்யப் பேரரசின் அப்போதைய வெளியுறவு அமைச்சரான பேவன் ஸ்டார்செல் மேலும் அதிக விலை கோரினார். பேரம் நடந்தது. 72 இலட்சம் டொலருக்கு அலாஸ்காவை ரஷ்யப் பேரரசு ஒத்துக்கொண்டது. ஒப்பந்தப் பத்திரம் தயாரிக்கப்பட்டு அது அமெரிக்க செனட்டின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. பெரும்பாலான வர்கள் ஏற்றுக்கொண்டனர். சிலர் எதிர்த்தனர். அலாஸ்கா ஒரு தேவையில்லாத ஐஸ் பெட்டி என்றனர் சிலர். அமெரிக்காவுக்கு இது வீண் செலவு என்ற கருத்து அதிகரித்தது.

அமெரிக்கச் சட்ட வெளியுறவு அமைச்சர் அலாஸ்காவுக்குச் சிலரை அனுப்பி அதன் வளங்கள் பற்றியும் அதை வாங்குவதால் அமெரிக்காவுக்கு எந்த அளவுக்குப் பலன் இருக்கும் என்பதையும் அறிந்து கொள்ள முயற்சி செய்தார். தவிர அலாஸ்காவை வாங்கு வது வருங்கால அமெரிக்காவுக்குப் பொருளா தாரக் கோணத்தில் நன்மை தருமா என்பதை அறிய ஒரு விசாரணைக் குழுவை அமைத்தார். அதற்குத் தலைவராக ராபர்ட் வாக்கர் என்ப வரை நியமித்தார். கமிஷனின் தலைவர் என்ற முறையில் வாக்கர் தன் குழுவினருடனும் தனியாகவும் ரஷ்யாவுக்கும் அலாஸ்காவுக்கும் பலமுறை விஜயம் செய்தார்.

ஒரு முறை இவர் அமெரிக்காவில் ஆளர வமற்ற சாலை ஒன்றில் நடந்துகொண்டி ருந்தபோது ஒரு பிக்பாக்கெட் திருடன் இவர் வைத்திருந்த ஒரு நீண்ட பையைத் திருடிக் கொண்டு ஓடினான். அங்கிருந்த பொதுமக்கள் காவல்துறைக்குத் தகவல் கொடுத்து திருடனைப் பிடிக்க வைத்தார்கள். அந்தப் பையில் பணத் தோடு சில ஆவணங்களையும் கைப்பற்றி னார்கள் காவல்துறையினர். கூடவே பல ஆயிரம் அமெரிக்க டொலர் மதிப்புள்ள தங்கப் பத்திரங்களும் அவற்றில் காணப்பட்டன. திருடன் மீது வழக்கு தொடர எவ்வளவோ எடுத்துக் கூறியும் மறுத்துவிட்டார் வாக்கர். தங்கப் பத்திரங்கள் குறித்து எதையும் பேச மறுத்தார்.


இந்தத் தங்கப் பத்திரங்களை யாருக்காக யார் கொடுத்தார்கள், எதற்காகக் கொடுத்தார்கள், கமிஷனின் தலைவர் விலை போய்விட்டாரா அல்லது யாரைச் சரிக் கட்டுவதற்காக இவை கொடுக்கப்பட்டன - இந்தக் கேள்விகளுக்கு இன்று வரை விடை தெரியவில்லை. இதனிடையே அமெரிக்க ஜனாதிபதி ஜான்சனின் தலைமையும் மாறிவிட்டது. பதில்கள் புதைக்கப்பட்டு விட்டன.

# எறும்பா இது

திகில் திரைப்படங்களில் வரும் இராட்சத மிருகத்தைப் போல இருப்பது, சாதாரண கட் டெறும்புதான் என்று சொன்னால் நம்ப முடிகிறதா! ஆம், இது சாதாரண கட்டெறும்பின் க்ளோஸ் அப் புகைப்படம் தான்.


பிரபல கேமரா தயாரிப்பு நிறுவனமான 'Nikkon', 1975 ஆம் ஆண்டு முதல் 'The Nikon Small World Competition' என்ற புகைப் படப் போட்டியை நடத்தி வருகிறது. இதில் புகைப்படக் கலைஞர்கள் பலர் கலந்து கொண்டு 'light microscope' போன்ற கேமரா லென்ஸ்களைப் பயன்படுத்தி நுண் உயிர்களை அல்லது மிகச்சிறிய நுண் பொருட்களைப் புதுமையான முறையில் புகைப்படம் எடுத்து போட்டிக்கு அனுப்புகின்றனர்.

இந்நிலையில் இந்த ஆண்டு 2022 ஆம் ஆண்டிற்கான 'The Nikkon Small World Competition 2022' போட்டி நடைபெற்றது. இதில் ஆச்சரியமளிக்கும் வகையில் பல புகைப்படங்கள் போட்டியில் பங்கேற்றன. அதில் 'Image of Distinction' என்ற தலைப்பில் ஐரோப்பிய ஒன்றியம் லிதுவேனியாவைச் சேர்ந்த யூஜெனிஜஸ் கவாலியாஸ்காஸ் என்ற புகைப்படக் கலைஞர் '5X -Objective Lens Magnification' என்ற லென்ஸ் மூலம் எடுத்த சாதாரண கட்டெறும்பின் க்ளோஸ் அப் புகைப்படம் தான் இது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசான்...



பத்துத் திங்கள்
அன்னையின் சுமை
பன்னிரு ஆண்டு
பள்ளியின் சுமை
இருபது வரை ஆசானின் சுமை

ஐந்து விரல் பற்றி
'அ' னா எழுத வைத்து
கல்விக் கண்ணை
திறக்க கதைகள் பல கூறி
படி ஏற வைத்தவரும்
என் ஆசானே
என் குறும்புகளை
கண்டித்து அடித்து
என்னை அணைத்து
நல்ல வழிகாட்டியவரும்
என் ஆசானே

தென்றல் என்னைத் தழுவ
சென்ற இடமெல்லாம்
சிறப்படைய வைத்த
மூன்று தெய்வங்களில்
முதல் தெய்வமான
எனது ஆசான் என்றும் பதினாறாய்
வாழ வாழ்த்துகிறேன்

எஸ். கலாமணி, மண்டைதீவு.

## பட்டினிப் பயணம்

போக்கே மாறியது பொருளாதாரக் கொள்கையில்
பேக்கரிக்கு அருகில் பெரிய வரிசை

பொது உடைமை பொருளாதாரம் பொறி பறந்தது
புதுப்புது சட்டங்கள் புரட்சி பேசின

கூப்பனுக்குக் கொடுக்கப்படும் கொஞ்ச அரிசி,மா
சாப்பிட்டதோ இல்லையோ சமாளிக்க வேண்டும்.

குழந்தை பால்மா கொஞ்சமும் கிட்டாது
மழலைகட்கு கூட மாப்பால் இல்லை

நாட்டை தாக்கிய நாச பஞ்சம் -மணி
வீட்டையும் கூட விடாமல் தாக்கியது

தோட்டம் செய்து தொடர்ந்தான் கல்வி
ஈட்டிய சித்தி எஸ்.ஐக்குக் காணும்

கல்வியை நிறுத்தி காவல்துறையில் சேர்ந்தான்
இல்லாத ஒருவனுக்கு இருக்கும் ஒரு வழிதான்

கட்டான உயரம் கரம் கொடுத்தது
மட்டிலா மகிழ்ச்சியுடன் மனை நீங்கினான்.

சிவா, தும்பளை, பருத்தித்துறை.



## தமிழின் பெருமை



ஏட்டிலும் எழுத்திலும் உறையுந் தமிழ்
எம்மக்கள் நிதமும் உச்சரிக்கும் தமிழ்
பாட்டிலும் பண்ணிலும் பரவசமூட்டும் தமிழ்
பண்பட்ட தமிழர் வாழ்வைப் பறை சாற்றும் தமிழ்
ஆடலிலும் அரங்கினிலும் பரிமளிக்குந் தமிழ்
அவனியுற்றோர் தேனிசையை செவிமடுக்கும் தமிழ்
ஊடலிலும் உறவினிலும் உணர்ச்சி பொங்கும் தமிழ்
கவிஞர்கள் பாவினில் பிறக்கும் தமிழ்
ஏழ் நரம்பின் யாழிசை தனிலே
இனிதே பிறக்கும் பண்வண்ணத் தமிழ்
பாணரும் கூத்தரும் வாழ்வினிலே
பாடியும் ஆடியும் மகிழ்ந்த தமிழ்
திருமுறைகள் தந்த நாயன்மார்கள்
அற்புதங்கள் நிகழ்த்திய பெருமைத் தமிழ்
அருணகிரிநாதரின் அழகிய திருப்புகழில்
வடிவமைக்கப்பட்ட சங்கத் தமிழ்

சி.சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு.

## மௌனத்தின் தேடல்- 581



## உளவலிமை இளைஞனே...

பெற்றோருடன் வாழுதல்
பிள்ளைகள் சொத்தெனில்
உற்ற பேரருடன் வாழுதல்
உயர் பொக்கிஷமாம் கைப்பற்றி
ஊன்றுகோலுடன் முயன்று
பேரரின் எதிர்காலம் ஒளி வீச
நன்றே கற்று நலன் பெற
வல்லமை இளைஞனே வாழி!

சாமிபுத்திரன், சரவணை.

## அன்றும் இன்றும்

கூட்டுக் குடும்பங்களில்
கோலோச்சிய முதுமை
மூச்சுப் பேச்சின்றி
நடைப்பிணமாக
முதியோர் இல்லங்களில்

பி.யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## பந்த பாசம்

குடும்ப தலைவிருட்சம் தாத்தா நீங்கள்
தன்னையே உருக்கி ஒளி தரும் மெழுகுவர்த்தியானீர்கள்
தந்தை தாய் தவிக்க விட்டு வேலைக்குச் சென்றாலும்
தள்ளாத வயதிலும் தளராத துணிவு கொண்டு
வண்ணக் கதை பேசி பள்ளி கொண்டு சென்றீர்கள்

கும்பவழியான்,
உடுப்பிட்டி.

## முதுமை இனிமையானது

பேச்சுத் துணை இன்றி
தவித்த முதுமை வாழ்வில்
பேர்த்தியின் வருகையால்
முதுமை இனிமையானது

பிரகவி, கொக்குவில்.

## கல்வியும் ஞானமும்

துள்ளித் திரிந்த
பள்ளிப் பருவத்தில்
ஏறு முகமாய் என்றும்
இருக்கவில்லை கல்வி
காலம் கடந்த பின்பு
ஞானம் பிறந்து வளர்ந்தது
தள்ளாடும் வயதில் சிறிதும்
தளரா மனத்தெம்புடன்
சந்ததியினர் தலை நிமிர
சிந்தித்து செயல்புரிகின்றார்.

அருணகிராசா, சாவகச்சேரி.

## மௌனத்தின் தேடல்- 582



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்

## ஊன்றுகோலாவேன்

தட்டுத் தடுமாறி தளர்ந்து
நடக்கும் தாத்தாவின்
கை பற்றி நடப்பிக்க
நான் ஊன்றுகோலாவேன்

பி.மதுஷ்சன், தையிட்டி.

## உணவு மட்டுமல்ல

மழலையர் பருவம் முதலே
மனிதநேயமும் உணவுடன்
ஊட்டப்படுவதால் தான்
வீடுகளில் மட்டுமல்ல
வெளியிலும் அது வெளிப்படும்
ஆனால் எத்தனை வீடுகளில்
பிள்ளைகளுக்கு மனித நேயமும்
ஊட்டப்படுகிறது என்பதுதான்
இங்கு முக்கிய கேள்வியாகும்

சி.இ. அன்புதுரை,
சம்மட்டிவோலை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

## குறுக்கே புகுந்த குறுவாள்

காலத்தின் பதிவு 38

ஆனால் அங்குள்ள சூழ்நிலையைக் கண்டு பிரமித்துக்கொண்டே இருந்த தன்னையும் அந்த நடனம் மெய்மறக்கச் செய்யுமென்றோ உணர்ச்சி வசப்படுத்தி விடுமென்றோ ஆரம்பத்தில் தினையளவும் நினைக்காத காரணத்தினாலும் கலை சிறந்த தமிழகத்தின் இரத்தம் உடலில் ஓடியதால் உள்ளூர இருந்த கலாரசிகத் தன்மை மேலெழுந்து அவனைப் பூராவும் ஆட்கொண்டு விட்டதாலும் மேடையின் நடனமும் இசையும் உணர்ச்சிகளின் உச்சியைத் தொடத் தொடங்கி விட்டபடியாலும், அங்கு நிலவிய சூழ்நிலையோடு இரண்டறக் கலந்துவிட்ட இளையபல்லவன் சுயநிலையை அடியோடு இழந்தான்.

அப்படிச் சுயநிலையை இழந்ததால் மஞ்சளழகியின் மோகன உருவமும் சுபத்திரையின் சோகபாவங்களும் சிருஷ்டித்த மாய வலையில் அவன் மனம் சிக்கி நின்றது. மேடையில் ஆடுவது மஞ்சளழகி என்ற நினைப்புகூட அவன் மனத்திலிருந்து மறைந்தது. யாரோ ஓர் அபலை அலறித் தன்னை அழைப்பதாகவே எண்ணும் ஸ்திதிக்கு அவன் மனம் புரண்டுவிட்டது. அங்கிருந்த கூட்டம், கூச்சல், பந்தங்கள், விளக்குகள் அனைத்தும் அவன் கண்களிலிருந்து மறைந்தன. மேடைக்குப் பின் திரையிட்ட வெண்மதி வெள்ளி வானம் பரிதாபமாகத் தன்னைக் கை நீட்டிக் கைநீட்டி அழைத்த நடனப் பாவை, இவையே கண்களில் நின்றன. புத்தியை அந்தப் பாவையின் சோக கீதமும் அதற்குப் பின் மெருகு கொடுத்த ஒற்றைத் தந்தி வாத்தியத்தின் அழைப்பு நாதமும் இழுத்துக் கொண்டன. இந்த நிலையை அடைந்ததாலேயே மேடையை நோக்கி இரண்டடி விரைந்துவிட்ட இளைய பல்லவனை 'நில்' லென்ற சொல்லொன்று சரேலென நிற்க வைத்தது.


இன்பமான வீணையின் தந்திகளில் சுண்டும் விரலொன்று செய்துவிட்ட தவறின் காரணமாக ஏற்படும் அபஸ்வரமொன்று எப்படி வீணா நாகத்தின் பூரண இன்பத்தையும் கலைத்து விடுமோ, திவ்ய நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட்டுத் தியானத்தில் நிற்பவனைத் தம்பூரின் தந்தி ஒன்று திடீரென அறுந்து விபரீத ஒலி கிளப்பி எப்படி அவன் தியானத்தைக் குலைத்துவிட முடியுமோ அப்படி அந்த வாஜாங்கின் இன்னிசையை ஊடுருவி எழுந்த 'நில்'லென்ற அதிகாரச் சொல் இளைய பல்லவன் உணர்ச்சி மயக்கத்தைச் சட்டென்று உடைத்து விடவே, ஒரே விநாடியில் சுயநிலை அடைந்து உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு அடுத்த அடி மேடையை நோக்கி நகராமலும் மிக நிதானமாகவும் திரும்பி அந்தச் சொல் எழுந்த திக்கை நோக்கினான் இளைய பல்லவன்.

அந்த 'நில்'லென்ற சொல்லைத் தொடர்ந்து 'கிளிங்' என்ற மற்றொரு ஒலியையும் அந்த ஒலியைத் தொடர்ந்து தன் காலடியில் விழுந்த இரு குறுவாள்களையும் சற்று அசட்டையுடனேயே கவனித்த அந்த வாலிப வீரன் தன்னைக் குறி வைத்துக் கத்தி வீசியவனையும் அந்தக் கத்தி தன் மீது பாயவொட்டாமல் அதை நோக்கிக் குறுவாளொன்றை வீசித் தடுத்து விட்ட அமீரையும் திரும்பத் திரும்ப நோக்கியதன்றிப் பலவர்மனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அந்த நால்வர் மீதும் தன் கண்களை நிலைக்க விட்டான்.

திடீரென்று ஏற்பட்ட அந்த நிகழ்ச்சி மேடை நடனத்தை மட்டுமல்ல, எதிரேயிருந்த கூட்டத்தையும் கூட்டத்தைச் சுற்றிக் காவல் புரிந்த அக்ஷயமுனைக் கோட்டைக் காவலரையும்கூட ஸ்தம்பிக்கச் செய்திருந்தது. கூட்டத்தையும் காவலரையும் மட்டுமல்லாமல் பலவர்மனையும் அவனுக்குப் பின்னால் நின்ற அந்த நால்வரையுங்கூட அது பெரும் பிரமிப்புக்கள் ஆழ்த்தியிருந்ததால் கடற்கரை பூராவும் பயங்கர அமைதி நிலவிக் கிடந்தது. அந்த நால்வரில் இளையபல்லவனை நோக்கிக் குறுவாளை வீசினவன், தனது குறுவாளை அதிவேகமாகப் பாயும் மற்றொரு குறுவாள் தடுக்க முடியுமென்பதைக் கனவில் கூட நினைக்காதவனாகையால், அவன் கண்களில் பிரமிப்புடன் ஆச்சரியமும் மிதமிஞ்சித் துலங்கியது.

(தொடரும்...)

# உலகின் தொழில்திறன் அதிசயங்கள் பகுதி -3



**ம**ன்ஹாட்டனிலிருந்து புரூக்ளின் வரை செல்வதற்கு சுற்று வழியைத் தவிர்த்து கிழக்கு ஆற்றின் மீது ஒரு தொங்கும் பாலம் கட்டினால் அது பயண நேரத்தையும் செலவையும் குறைக்கும் என அவர் நம்பினார். 1845 ஆம் வருடம் பிட்ஸ்பர்க்கில் உள்ள மோனன் கஹெலா ஆற்றின் குறுக்கே சிறிய தொங்கும் பாலம் கட்டிய அனுபவம் ரூப்ளிங்குக்கு உண்டு.

புரூக்ளின் பாலம் பற்றிய ஒரு திட்ட வரைபடத்தை அவர் உருவாக்கினார். இதற்கு பல பொறியாளர்கள் அவநம்பிக்கையான விமர்சனங்களை வீசினர். ஆனாலும் தளர்வடையாத ரூப்ளிங் தனது மகன் வாஷிங்டன் புரூக்ளின் - ஐ தன்னுடன் சேர்த்துக் கொண்டு தனது திட்டத்தை செயற்படுத்த இறங்கினார்.

இரண்டு பேரும் சேர்ந்து பாலம் கட்டுவதற்கான வேலையை 1869 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பித்தார்கள். தொடங்கிய பதினைந்து நாட்களுக்கு உள்ளாகவே வேலை செய்யும் இடத்தில் ரூப்ளிங் காலில் ஒரு இரும்புக் கம்பி குத்தியது. அதனை அலட்சியப்படுத்திய ஜான் ரூப்ளிங் தொடர்ந்து தனது பணிகளில் கவனம் செலுத்தினார். அவரது கால் புரையோடி அதன் காரணமாக 1869 ஆம் ஆண்டு ஜூலை 22 ஆம் திகதி இறந்து விட்டார்.

சில நாட்களில் அவரது மகன் வாஷிங்டன் ரூப்ளிங்குக்கு தலையில் அடிபட்டு மூளை பாதிப்படைந்தது. அவரால் நடக்கவும் பேசவும் முடியாத நிலை ஏற்பட்டது. வெறும் விரலசைவு மட்டுமே அவரது வெளி உலகத்துக்கான தொடர்புச் சாதனமாக இருந்தது. ஆக இந்தப் பாலம் கட்டுவதை தெரிந்தவர் இரண்டு பேர் மட்டுமே.

ஒருவர் இறந்து விட்டார் இன்னொருவர் கை கால் அசைவு இல்லாமல் இருக்கிறார். வாஷிங்டன் மருத்துவமனையில் படுத்திருந்தாலும் அவர் மனம் முழுக்க அந்த பாலத்தைக் கட்டுவதைப் பற்றியே யோசித்துக் கொண்டு இருந்தது.

விரல் அசைவு மூலம் தன் மனைவி எமிலி வாரன் ரூப்ளிங்கிடம் தன் விருப்பத்தைக் கூறினார். மீண்டும் இஞ்சினியர்களை வரவழைத்து வேலையை ஆரம்பிக்கச் சொன்னார். விரல் அசைவு உரையாடல் மூலமே தன் மனைவி எமிலி வாரனின் உள்ளங்கையில் தடவி அவளுக்கு புரிய வைப்பார். எமிலி பொறியாளர்களுக்கு கட்டளைப் பிறப்பித்து கொண்டு இருப்பார்.

தனது கணவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே வாஷிங்டனின் மனைவி எமிலி உயர் கணிதமும் பாலங்கள் கட்டத் தேவையான அறிவியலையும் பொருட்களின் வலுதாங்கும் சக்தி பற்றிய படிப்பையும் படித்து படுக்கையில் இருக்கும் கணவனின் வழிகாட்டலில் பாலம் கட்ட உதவியாக இருந்தார். விரல் அசைவு மூலமாகவே 11 ஆண்டுகள் தன் மனைவியின் உள்ளங்கையில் தடவி உணர்த்தி இந்தப் பாலத்தை ரூப்ளிங் கட்டி முடித்தார்.

வாஷிங்டன் ரூப்ளிங் தனது மரணம் வரையில் அதே நிலையில்தான் இருந்தார். அவரால் தனது தந்தை மற்றும் தான் கண்ட கனவு பாலத்தை உருவாக்கும் பணியில் நேரடியாக நின்று பார்க்க முடியாமல் போயிற்று.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

314

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# உடல் ஆரோக்கியத்துடன் நிறை குறைப்பதில் அக்கறை செலுத்த...

ஒருவர் அளவான உடல் நிறையை பேணுவது அவர் வாழும் காலத்தை அதிகரிக்கச் செய்வதுடன் அவரின் செயற்றிறனையும் கற்கும் திறனையும் கூட்டும் என்பது பல ஆராய்ச்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நிறையை சரியான அளவில் பேணாதவர்களுக்கு நீரிழிவு, உயர்குருதி அமுக்கம், பாரிச வாதம், மூட்டு சம்பந்தமான நோய்கள், நாரி சம்பந்தமான நோய்கள், புற்று நோய்கள், மாரடைப்பு, நுரையீரல் சம்பந்தமான நோய்கள், மாதவிடாய் கோளாறுகள், கர்ப்பம் தரிப்பதில் தாமதம், குடும்ப வாழ்வில் ஆரோக்கிய குறைவு போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம் ஆகும்.


சீனி, சர்க்கரை, பனங்கட்டி அல்லது இவை சேர்த்து தயாரிக்கப்பட்ட உணவுகள் அல்லது பானங்கள் போன்றவற்றை சிறிதளவு உட்கொண்டாலும் பெரும் நிறை அதிகரிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. காரணம் இவற்றில் இருக்கும் கலோரி அடர்த்தி அதிகமாகும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி என்பவற்றிக்குப் பதிலாக இனிப்பூட்டிகள் அல்லது சுவையூட்டிகளை பயன்படுத்தலாம். இவற்றின் சுவை சீனியை ஒத்ததாக இருக்கும் ஆனால் நிறை அதிகரிப்பு எதனையும் ஏற்படுத்தாது. நீரிழிவு இல்லாதவர்களும் இதனைப் பயன்படுத்தமுடியும். சீனி, சர்க்கரை, பனங்கட்டி போன்றவற்றுடன் ஒப்பிடும் போது இந்த இனிப்பூட்டிகள் பாதுகாப்பானவை மட்டுமல்ல நிறை அதிகரிப்பையும் ஏற்படுத்தமாட்டாது.

இதேபோன்று எண்ணெய் அல்லது எண்ணெயில் பொரித்த உணவு வகைகளும், பட்டர், மாஜரின் போன்றவற்றையும் சிறிய அளவு உணவில் சேர்த்தாலும் அதிகளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தவல்லன. நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய் போன்ற எண்ணெய் வகைகள் உட்பட எல்லா எண்ணெய் வகைகளும் நிறை அதிகரிப்பை ஏற்படுத்த வல்லன. மிக்சர், வடை, ரோல்ஸ் ஏனைய பொரியல் வகைகள், தேங்காய் அதிகளவு சேர்த்த உணவு வகைகள், எண்ணெய் சேர்த்து செய்யும் உணவுவகைகள் போன்றவற்றில் எண்ணெயின் வீதம் அதிகமாக இருப்பதால் இவற்றில் சிறிதளவை உட்கொண்டால் கூட பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தும்.

நிறை குறைப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் சுவைக்காகவும் பசியை போக்குவதற்காகவும் ஆரோக்கியத்திற்காகவும் அடிக்கடி உண்ணக்கூடிய உணவுவகைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். பழவகை குறிப்பாக கொய்யா, தோடை, அப்பிள், ஜம்பு, விளாம்பழம், பப்பரசி, வாழைப்பழம், நாவல் போன்றன. அத்துடன் எல்லாவிதமான மரக்கறி வகைகள் குறிப்பாக அகத்தி, முருங்கை, கோவா, கரட், பீற்றூட், தக்காளி, முள்ளங்கி, கீரைவகை, பயிற்றை, வெங்காயம், போஞ்சி, சிறகவரை, லீக்ஸ் போன்றவை. இத்துடன் பானங்களான மோர், இனிப்பூட்டிகள் சேர்த்த சீனி சேர்க்காத தேநீர், கோப்பி, பால், தேசிக்காய் தண்ணீர், குத்தரிசிக்கஞ்சி, தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பால், முட்டை, மீன், இறால், தானிய வகைகள் போன்றவற்றை போதியளவு உணவில் சேர்த்துக்கொள்வது நன்மை பயக்கும். இவை எமக்கு அதிகளவு புரதத்தை வழங்குவதுடன் பசியை கட்டுப்படுத்தவும் உணவில் சுவையை கூட்டுவதற்கும் உறுதுணையாக இருக்கும்.

நிறை குறைப்பதில் மட்டும் கவனம் செலுத்தாது உடல் ஆரோக்கியத்துடன் நிறை குறைப்பதில் அக்கறை செலுத்த வேண்டும். இதற்கு உடற்பயிற்சி மிகவும் உறுதுணையாக அமையும். உணவு வீணாகப்போகிறதே என்ற உணர்வில் மிகுதி உணவுகளை உண்ணும் பழக்கத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பசிக்காத வேளைகளில் மிகுதி உணவை உண்டால் உடம்பு தான் வீணாகிப் போகும்.

பிறரின் வற்புறுத்தலிற்காக உணவு உண்ணுவதையும் உணவு உண்ணுமாறு ஒருவரை வற்புறுத்துவதை ஒரு உபசார முறையாகக் கடைப்பிடிப்பதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும். பசிக்காத வேளையில் ஒருவரை உண்ணுமாறு வற்புறுத்துவது அவரை நோயாளி ஆக்கும் படிமுறையாக அமைத்து விடும். உணவு அருந்துவதற்கு 10 நிமிடங்கள் முன்னதாக பழங்களை உண்டு அதன்பின்னர் உணவை அருந்துதல் நல்லது. இது உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக் கொள்ள உதவியாக இருப்பதுடன் போதுமான உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.



உணவை ஆறுதலாக உண்ணப்பழக வேண்டும். இது குறைந்தளவு உணவுடன் பசியைப் போக்கவும் போதுமான அளவு உணவு உண்ட திருப்தியை ஏற்படுத்தவும் உதவும். சாப்பாட்டுக் கோப்பைகளையும் கரண்டிகளையும் சிறியனவாக தெரிவுசெய்து வைத்திருப்பது பயன்தரும். இதன் மூலம் அளவுக்கதிகமான உணவு உட்கொள்ளப்படுவதை குறைத்துக் கொள்ள முடியும். தேநீர் கோப்பையையும் சிறியதாக தெரிவு செய்து வைத்திருப்பது நல்லது.

தினமும் ஒரே வகையான உணவு வகைகளை உண்பதிலும் பார்க்க நிறத்தாலும் சுவையாலும் வாசனையாலும் மாறுபடும் வெவ்வேறு வகையான உணவுகளை மாறிமாறி உண்பது உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும் புத்துக்கத்தையும் தருவதுடன் பசியைக் கட்டுப்படுத்தி ஆரோக்கியமான நிறை குறைப்பிற்கு வழிவகுக்கும். ஒரே வகையான உணவு வகைகளை உண்ணுவதன் மூலம் எல்லா வகையான சத்துக்களையும் பெற்றுக்கொள்ள முடியாது.

நிறையை குறைப்போம் என்று உறுதி எடுப்போம். அதற்கான ஆர்வத்தை விதைத்து வளர்ப்போம். உடற்பரிமாணங்களைப் பேணும் கலையை கற்றுத் தெளிவோம். இதை நடைமுறைப் படுத்த திடசங்கற்பம் எடுப்போம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு ஒரு மழைக்கால அனர்த்தம்!

மறுபடியும் எமது பிரதேசங்களில் நாம் எதிர்பார்த்திருந்த மாரிகாலம் தொடங்கிவிட்டது. அப்பாடா! இதுவரை அனுபவித்த உஷ்ணத்திலிருந்தும் வியர்வையிலிருந்தும் சில மாதங்களுக்கு விடுதலை என நம்மில் பலரும் ஆறுதலடைகிறோம். மின்சாரக் கட்டணங்களைக் கூட கொஞ்சம் சிக்கனமாக்கிக் கொள்ள முடியும் என்ற குடும்பத் தலைவர்களின் நிம்மதிப் பெருமூச்சு வேறு!

மழை என்பது ஒரு நாட்டின் செழிப்பு; நாட்டின் ஆட்சி நன்றாக இருந்தால் அந்நாட்டில் மழைவளம் பெருகும் என்ற நம் முன்னவர்களின் நம்பிக்கை. இவை யாவும் ஒருபக்கமிருக்க, மழை வந்து விட்டால் வீட்டு சுற்றாடலிலும் தெருவோரங்களிலும் வெள்ளம் நிரம்பி வழியுமே. சேறும் சகதியுமாக எமது சுற்றுப் புறங்கள் சுத்தமற்று காணப்படுமே என்ற மனக்குறைகள் நம் பலரது மனதிலும் தற்போது எழுகிறது.

ஆம்! கடந்த சில வருடங்களாக எமது பிரதேசங்களில் நடைபெற்ற வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளின் பின்னர் எமது பிரதேசங்களின் வடிகாலமைப்பு முறைகள் யாவும் உருக்குலைந்துள்ளன. இதனால் மழைநீர் உரிய முறையில் வடிந்து செல்ல முடியாமலும் நிலத்தடி நீர் வற்ற முடியாமலும் தடைப்பட்டு ஆங்காங்கே தேங்கிக் காணப்படுகிறது. இதனால் மக்கள் போக்குவரத்து சிரமங்களையும் அசௌகரிய்ங்களையும் எதிர்நோக்குவது மட்டுமல்லாது இந்நீர் நிலைகளில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் அதிகளவில் விருத்தியடைந்து டெங்கு நோய்த்தொற்று தீவிரமடைய வாய்ப்பளிக்கின்றது.



ஏற்கனவே மருத்துவமனைகளில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. குறிப்பாக குழந்தை மருத்துவப் பிரிவில் டெங்கின் தாக்கம் அதிகமாகவும் இக்காய்ச்சல் காரணமாக இந்நோயாளர்கள் அபாய நிலைக்குச் செல்லும் நிலைமைகளையும் காணக்கூடியதாக உள்ளது. டெங்கு நோய்த் தாக்கத்தினால் ஒரு உயிரைக் கூட இழப்பது ஏற்றுக்கொள்ள முடியாததும் ஜீரணிக்க முடியாத உண்மையுமாகும். எனவே இவ் அபாயத்தினை இனிவரப்போகும் சில மாதங்களுக்கு நாம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றோம்? எமது பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலையும் அதனால் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலைமைகளையும் எவ்வாறு தடுக்கப் போகிறோம்?

**இது ஒன்றும் நம்மால் முடியாத காரியம் அல்ல என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.** எமது வீட்டிலோ அல்லது அயலிலோ டெங்கு நோயினால் ஏற்படும் உயிரிழப்புக்கு நாமும் ஒரு காரணமாக இருக்கிறோம் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

டெங்குநோயைக் கட்டுப்படுத்த எம்மால் என்ன செய்ய முடியும்? முறைமையற்ற வீதியமைப்பு வடிகால்கள் பற்றியும் நீர் நிலைகள் தேங்குவது பற்றியும் நமக்கு அப்பாற்பட்ட விடயங்களைக் குறை கூறிக் கொண்டிருப்பதால் அதிகரிக்கப்போகும் நுளம்பின் பெருக்கத்தையோ டெங்குத் தொற்றின் தீவிரத்தையோ தடுக்க முடியாது என்பதை நாம் அனைவரும் உணர வேண்டும். எனவே இதனைக் கட்டுப்படுத்துவதற்கு ஏற்ற வழிகளை வேகமாக முன்னெடுக்க வேண்டும்.

**"வருமுன் காப்போம்"** என்பதே எமது குறிக்கோள். இதற்கேற்ப எமது வீட்டு சுற்றுப்புறங்களையும் எமது அயல் பகுதிகளையும் நன்கு அறிந்தவர்கள் நாங்களே. எனவே இவ்வாறான எளிமையான நடைமுறைகளைக் கைக்கொண்டால் நீர் தேங்கும் இடங்களை இல்லாதொழிக்க முடியும் என்பதைச் சிந்திப்போம். நீர் தேங்கும் குழிகளை நிரப்புவதன் மூலமும், தற்காலிக வடிகால்களையும் அமைப்பதன் மூலமும், நீர் தேங்கக்கூடிய கொள்கலன்களை (பிளாஸ்டிக் கொள்கலன்கள், பூந்தொட்டி, சிரட்டை,டயர்) அப்புறப்படுத்துவதன் மூலமும் நீர் தேங்குவதைத் தவிர்ப்போம். இச் செயற்பாடுகளை ஒழுங்காக ஒவ்வொரு பெருமழையின் பின்னரும் அல்லது ஒவ்வொரு நாளும் கூட செய்ய வேண்டி இருக்கலாம். சிறியவர் முதல் பெரியவர் வரை யாவருமே தம்மாலான பங்களிப்பைச் செய்வதனால் நிச்சயமாக நம்மையும் நம் பிரதேசத்தையும் நுளம்புத் தாக்கத்திலிருத்தும் டெங்கு நோய்த் தொற்றிலிருந்தும் காப்பாற்ற முடியும். நாம் ஒவ்வொருவரும் செய்யப் போகும் இவ்வாறான நற்சேவையினால் எம்மை அறியாமலே எம்மையும் எம் சுற்றத்தாரின் உயிரையும் எம்மால் காப்பாற்ற முடியும் என்பது நிச்சயம்.

எல்லாவற்றிற்கும் மேலாக நமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளினால் மருத்துவமனைகளில் மருந்து மற்றும் இதர அத்தியாவசிய உபகரணங்களின் பற்றாக்குறைகள் காரணமாக உரிய மருத்துவ சேவைகளை நோயாளிகளுக்கு வழங்க முடியாத நிலைக்கு நாம் இன்று தள்ளப்பட்டுள்ளோம். ஆகவே, நோய் பரவலையும் அதன் தாக்கங்களையும் தடுப்பதும் டெங்கு நோயின் தொற்றிலிருந்து எம்மைக் காத்துக் கொள்வதும் எமது தலையாய கடமையாகவும் காலத்தின் கட்டாயமாகவும் உள்ளது. **எனவே டெங்கு நோயின் அபாயத்திலிருந்து எம்மைக் காத்துக் கொள்ள எம்மாலான முயற்சிகளைச் செய்வோம்.**


**மருத்துவர் (திருமதி) ஜெ.பிரதீபன்**
**பொது மருத்துவ நிபுணர்**
**பல்கலைக்கழக மருத்துவப் பிரிவு**
**யாழ்.போதனா மருத்துவமனை**



## விற்பனைக்கு

தேக்கு மர கதவு, ஜன்னல், கண்ணாடி ஜன்னல், கதவு நிலைகள் இறக்குமதி செய்யப்பட்ட சீலிங் ஷீட், Floor கார்ப்பட், லைட்ஸ், அலுமினியம் பார்டிஷன் இறக்குமதி செய்யப்பட்ட கார் செட்டப்ஸ்,பெலட் ஜெக், போக்கர் கேபல், ஸ்டீல் பிளேட் மற்றும் கட்டப் பொருட்களுக்கு தேவையான பாவித்த இயந்திரங்கள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

**திங்கள் முதல் சனிக்கிழமை**
**காலை 9.30-மாலை 5.00**
**வரை பார்வையிட முடியும்.**

தொடர்புகளுக்கு-
077 757 8277/ 077 792 4194/
077 780 4601 / 077 545 1840

**#266 / 18A, St Jude Garden,**
**Bopitiya Road Dikowita,Wattala.**

(சி-1830)


## போதியளவு அரிசி கையிருப்பில் விவசாய அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் 7070 மெற்றிக் தொன் நெல் இருப்பு உள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் போதியளவு அரிசி கையிருப்பு இருப்பதால் எதிர்காலத்தில் அரிசி தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் இல்லை என அமைச்சு தெரிவித்துள்ளது.

சந்தையில் அரிசியின் விலையினை கருத்தில் கொண்டு அரிசியின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த தேவைப்பட்டால் நெல் சந்தைப்படுத்தல் சபையின் கையிருப்பு அரிசியாக மாற்றப்படும் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் சந்தையில் அரிசியின் விலை உயர்வை கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும் அரிசி இறக்குமதி மற்றும் உதவியாக வேறு நாடுகளில் இருந்து அரிசி தொகை பெறப்பட்டமையினால் இது நிகழ்ந்துள்ளதாகவும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

## தேயிலை ஏற்றுமதி மேலும் வீழ்ச்சி

(கொழும்பு)

சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் சிரியா, இந்தியாவிலிருந்து தேயிலையை கொள்வனவு செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் மற்றும் துருக்கி போன்ற நாடுகளும் இலங்கையில் இருந்து சந்தைக்கு தேயிலை வராத நிலையில் இந்தியாவில் இருந்து பெருமளவு (ஓர்த்தடொக்ஸ்) மரபுவழி தேயிலையை கொள்வனவு செய்வதாக தெரிவித்துள்ளனர்.

ஓர்த்தடொக்ஸ் தேயிலை என்பது மரபுரீதியான தேயிலையைக் குறிக்கிறது. இது பாரம்பரிய அல்லது மரபுவழி முறைகளான பறித்தல், வாட்டுதல், உருட்டுதல்,மற்றும் உலர்த்துதல் போன்ற முறைகளை பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது.ஓர்த்தடொக்ஸ் தேயிலையின் உலகளாவிய வர்த்தகத்தில் பாதியை இல்ங்கை கொண்டுள்ளது.

எனினும் நாட்டில் நிலவும் அரசியல் குழப்பங்கள் காரணமாக இலங்கையின் தேயிலை சந்தையில் இல்லாதது இந்தியா மரபுவழி தேயிலை நுகர்வு நாடுகளுக்குள் நுழைவதற்கு உதவியுள்ளது. (4)


The 69th Annual Festival of Carols
by the
Combined Choirs of
Schools and Colleges of the North

Will be held at the
St.John's College Hall
on Saturday 5th November 2022
at 4.00 p.m

Admission : By Hymn Sheet-Rs.50/=

(3176)


## 22 ஆவது திருத்தச் சட்டம் நாட்டிற்கு பயனற்றது- மகிந்த

(கொழும்பு)

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல் நிலவரம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

22 ஆவது திருத்தச் சட்டம் மூலம் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது என தெரிவித்த அவர் அனைவரும் ஓரணியில் பயணித்தால் மட்டுமே நாடு மீளெழுச்சி பெறும் எனவும் கூறியுள்ளார்.



மேலும் 22 ஆவது திருத்தச் சட்டத்தால் எதை சாதிக்கப் போகின்றார்கள் என்பதை அரசாங்கம் பகிரங்கமாகக் குறிப்பிட வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் அதிகரித்த போதை திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலா?

## சமத்துவக்கட்சி

(கிளிநொச்சி)

வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்த நிலைமை என்பது ஒரு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிநிரலா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதோடு,எமது சமூக வீழ்ச்சியே முக்கிய காரணமாக காணப்படுகிறது.

சமூக வீழ்ச்சிக்குப் பிரதான காரணம், சரியான அரசியல் தலைமைத்துவம் இல்லாமையே. சரியான அரசியல் தலைமைத்துவத்தின் வழிகாட்டல் இல்லாத சமூகங்களின் நிலைமை இப்படித்தானிருக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சமத்துவக் கட்சியின் செயலாளருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வடக்கில் அதிகரித்துள்ள போதைப்பொருள்பாவனை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப் பொருள் பாவனை -விற்பனையின் அதிகரிப்பும் தலைதூக்கியுள்ளது. என்றுமில்லாத அளவுக்கு வடக்கில் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது.

இதனை கட்டுப்படுத்த வேண்டிய தரப்பினர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக பொது மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். இதுவொரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலா என்ற சந்தேகமும் பொது மக்கள் மத்தியில் வலுவாக காணப்படுகிறது.

இதைக்குறித்து ஊடகங்கள், சமூக மட்ட அமைப்புகள், அரசியல் தலைமைகள், பொலிஸ் மற்றும் சட்டத் தரப்புகள் ஒருங்கிணைந்து செயற்பட்டு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

இது மிக மிக அவசியமானது. பாடசாலை மாணவர்கள் தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட இளைய தலைமுறையே இதில் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உடல், உள ரீதியாக இவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

சிலர் வன்முறைகளிலும் திருட்டிலும் ஈடுபடுகின்றனர். இளைய தலைமுறை பாதிக்கப்பட்டால் எதிர்காலச் சமூகமே பாதிப்புக்குள்ளாகும் என மேலும் தெரிவித்தார். (4)

முல்லைத்தீவில்

# நிலத்தடி நீர் சீரின்மை

## சிறுநீரக நோயாளர்கள் அதிகரிப்பு

## சுகாதார தரப்பு சுட்டிக்காட்டு

(தருமபுரம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் இதற்கான பிரதான காரணம் அங்குள்ள நிலத்தடி நீர் எனவும் சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவில் வருடந்தோறும் சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

குறிப்பாக மாவட்டத் தில் ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வெலி ஓயா, மாந்தை கிழக்கு, துனுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகரித்த சிறுநீரக நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும் இதற்கான காரணம் இங்குள்ள நிலத்தடி நீரில் காணப் படுகின்ற பார உலோகங்கள் என்றும் சுகாதார தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வாராந்தம், மாதாந்தம் யாழ்ப்பாணம், வவுனியா, அநுராதபுரம் மருத்துவமனைகளுக்கு கடும் சிரமங்களுக்கு மத்தியில் குருதி சுத்திகரிப்பு சிகிச்சைக்கு சென்று வருகின்றனர் என்றும் சுகாதார துறையினர் தெரிவித்துள்ளனர்.

எனவே இப் பிரதேசங்களில் உள்ள மக்களை சிறுநீரக நோயிலிருந்து பாதுகாக்க வேண்டும் எனில் குடிப்பதற்கு உகந்த நீரை வழங்க வேண்டும் என்றும் சுகாதார தரப்பு தெரிவித்துள்ளது. (4-316)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோர் கைது

(தருமபுரம்)

சுண்டிக்குளம் தேசிய பூங்கா மற்றும் பறவைகள் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி கடந்த 27 ஆம் திகதி மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு இயந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் அதன் சாரதிகளும் வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் மணல் ஏற்றிச் சென்ற அனைவரையும் விசாரணைக்கு உட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது. (4-316)


# மரண அறிவித்தல்

## அமரர். ஐயம்பிள்ளை யோகலிங்கம்



பிறப்பு 1951 . 02 . 25

இறப்பு 2022 . 10 . 28

சரசாலையை பிறப்பிடமாகவும் சுன்னாகம் பரித்திகலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட J.K.T ரான்ஸ்போர்ட் உரிமையாளர் ஐயம்பிள்ளை யோகலிங்கம் (சின்ராசு) 28.10.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சுன்னாகம்,
பரித்திகலட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(13296)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 36 சூரி 9 செவ் 12 இல்<br>உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: HNDA பட்டதாரி சொந்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13081 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: சூரி 7 செவ் 3 இல்<br>உயரம் : 5' 4"<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவ பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச.தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10866 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: சூரி 4 செவ் 2 இல்<br>உயரம் : 5' 4"<br>தகைமை/தொழில்: A/L வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13082 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 16 ¾ சூரி 6 செவ் 4 இல்<br>உயரம்:5' 2"<br>தகைமை/தொழில்: HNDIT, B.com, Bsc அரச வங்கி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/10870 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 55 சூரி 4 செவ் 7 இல்<br>உயரம்: 5' 5"<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ் (இந்தியா தான் வரலாம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13083 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3<br>கி.பா: சூரி 10 செவ் 3 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் அல்லது வெளிநாடு<br>தொ.இ: G/10872 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 2<br>கி.பா: சூரி 10 செவ் 9 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்: BSc லண்டன்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/13084 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: 28 ½ சூரி 7 செவ் 6 இல்<br>உயரம்: 5' 2"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10886 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவனுடைய அறிவு நியாயமாக இல்லையோ அவன் எளிதில் கோபத்துக்கும் தீய எண்ணங்களுக்கும் கடுமையான சொற்களுக்கும் இடம் கொடுத்து விடுவான். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வைதாரையும் வாழ வைக்கும் தமிழ்த் தலைவன் முருகன்

இன்று சூரன் போர். சுரபன்மனை அடக்கி தேவர் குலம் காத்த முருகப் பெருமான் தமிழ்த் தலைவன்.

வைதாரையும் வாழ வைக்கும் அவனின் கருணைக்கு எல்லை ஏதுமில்லை.

எனினும் முருகன் சூரபன்மனுடன் போர் புரிந்த முறைமை வித்தியாசமானது.

அது தமிழர்களின் போர்த் தர்மத்தை எடுத்தியம்புவது.

ஆம், யுகம்தோறும் பெரும் யுத்தங்கள் நடந்துள்ளன.

இங்கு யுத்தம் என்பது தர்மத்துக்கும் அதர்மத்துக்குமிடையிலானதென்பது புரிதற்குரியது.

உதாரணத்துக்கு மகாபாரதப் போரை எடுத்துக் கொள்ளலாம்.

கௌரவர்களை அழித்து பாண்டவர்களைக் காப்பாற்றுகின்ற குருசேத்திரப் போரை கண்ணன் நடத்துகின்றான்.

போர்த் தலைவன் அருச்சுனனாகிய பார்த்தனாயினும் போரை நடத்துபவன் பார்த்த சாரதியாகிய கண்ண பரமாத்மா என்பது எல்லோரும் அறிந்த விடயம்.

இங்குதான் போர்த் தர்மம் குறித்த இரண்டு விடயங்கள் விமர்சனத்துக்கு ஆளாகின்றன.

அதாவது அவதார புருசனாக இருக்கக் கூடிய கண்ண பரமாத்மா, போரை விரும்பாமல் தளர்வுற்ற அருச்சுனனுக்கு கீதோபதேசம் செய்ததுபோல அதர்மகுணம் மிகுந்த துரியோதனனுக்கு கீதோபதேசம் செய்யாதது ஏன்?

தனித்து தூது சென்றதோடு தன் பணி முடிந்துவிட்டதாக கண்ணன் நடந்து கொண்டான்.

மாறாக அருச்சுனனுக்கு தேர்ச்சாரதியாக இருந்து கண்ணபரமாத்மா போர்க்களத்தில் செய்தவையெல்லாம் ஒரு தலைப்பட்சமானவை.

உண்மையில் குருசேத்திரப் போர்க்களத்தில் கண்ணன் களமிறங்கியிருக்கக்கூடாது என்பது நம் சிற்றறிவின் முடிவு.

இங்குதான் தமிழ்த் தலைவன் முருகன் சூரன் போரை நடத்தி தமிழர்களின் தர்மம் எத்தகையதென்பதை உலகுக்கு உணர்த்துகின்றான்.

ஆம் சூரன்போர் ஆரம்பமாயிற்று. வேல் கொண்டு நிற்கின்ற முருகக் கடவுளை பாலன் என்று கணிப்பிடுகிறான் சூரன்.

இருந்தும் சூரனை வழிப்படுத்தி அவனைத் திருத்தி ஆட்கொள்வதிலேயே முருகன் கருசனை கொண்டுள்ளான்.

ஆணவ மலம் சூழ்ந்திருக்கக்கூடிய சூரனுக்கு, தன் திருப்பெருவடிவத்தைக் காட்டுகிறான் முருகன்.

திருப்பெருவடிவத்தைக் கண்ணுற்ற சூரன் திகைப்புறுகிறான். அண்டசராசரம் அனைத்தும் வேற்பெருமானில் அடக்கம் என்றுணர்ந்து முருகனைச் சேவித்து நிற்கின்றான்.

என்ன செய்வது. திருப்பெருவடிவம் கண்டும் மும்மலத்தினின்று மீள முடியாத சூரனை வேல் கொண்டு தாக்குகிறான் முருகன்.

இங்குதான் முருகனின் ஞானவேல் சூரனில் பட்டதும் அவன் மும்மலத்தினின்றும் விடுதலை பெறுகிறான்.

இங்குதான் சேவலும் மயிலுமாக அவனை ஆட்கொள்கின்றான் முருகன்.

ஆக, வைதாரையும் வாழவைக்கும் பெருங் கருணை தமிழர் தலைவனாகிய முருகனுக்கே உண்டென்பதை உணர்ந்து பெருமை கொள்வோம்.

# பகிடிவதையால் மாணவன் பலி
# சக மாணவனுக்கு மரண தண்டனை
## நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

1997 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவராக முதலாம் ஆண்டில் கல்வி கற்ற செல்வநாயகம் வரப்பிரகாஷ் என்பவரை படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில், அப்போதைய இரண்டாம் ஆண்டு மாணவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை, மேன்முறையீட்டு நீதிமன்றம் உறுதி செய்தது.

இந்த வழக்கில் பிரதானமாவராக குற்றஞ்சாட்டப்பட்ட பாலேந்திரன் பிரசாத் சதீஸ்கரனின் இருப்பிடம் தெரியாத நிலையில் அவர் ஆரம்பம் முதலே மன்றில் முன்னிலையாகத நிலையிலேயே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

செல்வநாயகம் வரபிரகாஷ், முதலாம் ஆண்டு பொறியியல் மாணவராக இருந்தபோது, அவர் மீது மனிதாபிமானமற்ற வகையில் பகிடிவதை மேற்கொள்ளப்பட்டது.

1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி இந்த சம்பவம் இடம்பெற்று சிறிது காலம் சிகிச்சை பெற்று வந்த அவர் 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி மரணமானார்.

சாட்சியங்களின்படி, பிரதான குற்றம் சாட்டப்பட்டவர்களும், பகிடிவதையில் ஈடுபட்ட ஏனைய மாணவர்களும் பொறியியல் பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களாவர்.

அரச தரப்பின் முதல் சாட்சி, இறந்தவரைப் பார்த்தபோது, அவர் கிட்டத்தட்ட நிர்வாணமாக இருந்தார் என்று கூறப்பட்டது. அத்துடன் (எழும்பு-இரு) என்ற உடற்பயிற்சியில் அவர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

அத்துடன் அவர் பொறியியல் பீடத்தில் இருந்து இரண்டாம் ஆண்டு மாணவர்களின் இருப்பிடத்துக்கு (வீடு) அழைத்துச் செல்லப்பட்டே பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இந்தநிலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் இரண்டு புகைப்படங்களை, கொண்டு அவர்களை சிகிச்சைப் பெற்று வந்தபோது வரப்பிரகாஷ், அடையாளம் காட்டினார். (ம-7)

## நிதியுதவி, வேலைத் திட்டம் தொடர்பில் அடுத்த பாதீட்டில் பட்டியலிடப்படும்
### பிரதமர் தினேஸ் குணவர்தன

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம், உலகளாவிய நட்பு நாடுகள் என்பவற்றின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியுதவிகள் மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அடுத்த பாதீட்டில் பட்டியலிடப்படும் என பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிதியுதவிகள் குறித்து பாராளுமன்றுக்கு அறிவிப்பதற்கு முன்னர் ஜனாதிபதியினால் பாதீடு முன்வைக்கப்படும்.

அதில் இலங்கைக்கான நிதியுதவிகள் மற்றும் வேலைத்திட்டங்கள் உள்ளிட்டவை தொடர்பில் அறிவிக்கப்பட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படும்.

அத்துடன் இலங்கை தொடர்பில் அறிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையினாலேயே அனுமதிக்கப்பட வேண்டும் என பிரதமர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார். (ம-7)

## 'எவரையும் கைவிடாதீர்' 2 ஆம் கட்டம் அடுத்த மாதம்

"எவரையும் கைவிடாதீர்" நலன்புரி திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, விண்ணப்பதாரரின் வீடுகளுக்குச் சென்று தரவுகளை உறுதிப்படுத்தம் பணிகளை அடுத்த மாதம் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

"எவரையும் கைவிடாதீர்" என்ற தொனிப் பொருளில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையில் ஆரம்பிக்கப்பட்ட, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்கும் திட்டத்திற்கு தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் பணிகள் நேற்றுடன் நிறைவடைந்தது.

அரசாங்கத்தின் நலன்புரி உதவிகளை எதிர்பார்த்து, இதுவரை 2.4 மில்லியன் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

நலன்புரி உதவிகளைப் பெறுவதற்கு தகுதியானவர்களென அடையாளம் காணப்பட்டுள்ள 70 சதவீதமானவர்களின் தரவுகள் தற்போது தரவுக் கட்டமைப்பில் பதிவேற்றப்பட்டுள்ளன.

ஏனைய 30 சதவீதமானோரின் தரவுகள் பிரதேச செயலகங்களிலுள்ள தரவுக் கட்டமைப்பில் பதிவேற்றப்படுகின்றன.

மேலும் 1.5 மில்லியன் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (ம-7)

## சிறுவனுக்கு துப்பாக்கி சூடு பொலிஸாருக்கு மறியல்

(கொழும்பு)

மாத்தறை, திஹாகொட பகுதியில் 15 வயது சிறுவனை துப்பாக்கியால் சுட்டு காயப்படுத்திய பொலிஸ் உத்தியோகஸ்தர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும், குறித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உப பரிசோதகரை நவம்பர் 2ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு, மாத்தறை நீதவான், நேற்று உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பாடசாலை மாணவர்கள் குழுவொன்று முச்சக்கர வண்டியில் பயணித்த நிலையில் அதனை நிறுத்தி சோதனையிட சென்றபோது, திஹாகொட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாகி இயங்கி துப்பாக்கி சூடு நடத்தப்பட்டிருந்தது.

குறித்த, சம்பவத்தில், படுகாயமடைந்த பாடசாலை மாணவர் வைத்தியசால்யில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக. நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** எஸ். ஆர் அரிசி ஆலையடி, ஸ்கந்தபுரம், அக்கராயன், கண்ணகிபுரம், விநாயகர் குடியிருப்பு ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

## பருப்பு, சீனி, அரிசி விலைகள் குறைவடைகின்றது

புறக்கோட்டை மொத்த சந்தையில் பருப்பு, வெள்ளை அரிசி உள்ளிட்ட பல பொருட்களின் விலைகள் மேலும் குறைந்துள்ளன.

கடந்த சில தினங்களுக்கு முன் 375 ரூபாவாக இருந்த ஒரு கிலோ பருப்பின் விலை 350 ரூபாவாக குறைந்துள்ளது.

அத்துடன் 290 ரூபாவாக இருந்த ஒரு கிலோகிராம் வெள்ளை பருத்தியின் மொத்த விலை 225 ரூபாவாக குறைந்துள்ளதாக அத்தியாவசிய பண்ட இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஒருகிலோகிராம் கோதுமை மாவின் மொத்த விலை நேற்று 250 ரூபாவாக குறைந்துள்ளது. (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் புதிய சட்டத்தை உருவாக்குக

## ஜனாதிபதி ரணில் உத்தரவு

(கொழும்பு)

**சுற்றாடல் பாதுகாப்புச் சட்டங்கள் குறித்து புதிய சட்டத்தை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய திணைக்களங்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.**



அதுவரை தேசிய பூங்காக்களுக்குள் பதிவு செய்யப்பட்ட சஃபாரி வாகனங்களைத் தவிர வேறு எந்த வாகனத்தையும் பிரவேசிக்க அனுமதிக்க வேண்டாம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

மேலும் சிவனொளிபாத மலை வனப்பகுதி மற்றும் சிங்கராஜவனம் போன்ற சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை பாதுகாப்பதற்குத் தனியான சட்டங்களை உடனடியாக உருவாக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நாட்டில் வனப்பரப்பு 35% ஆகக் குறைந்துள்ளதால் வனப்பரப்பை சேதப்படுத்தும் எந்தவொரு திட்டத்திற்கும் இடமளிக்க வேண்டாம் என்றும் ஆலோசனை வழங்கினார். (4)

# மின்கட்டணம் செலுத்த அரச நிறுவனங்களுக்கு கால அவகாசம்

(கொழும்பு)

நிலுவையிலுள்ள மின் கட்டணங்களை செலுத்துவதற்கு கால அவகாசம் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கே இந்தக் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பல அரச நிறுவனங்களில் நிலுவையில் உள்ள மின் கட்டணங்களை பெற்றுக் கொள்ளும் பணி தொடங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார். (4)

# 'ஈ' கடியினால் புதிய தோல் நோய்

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டில் இதுவரையில் மத்திய மாகாணத்தில் இலையான் கடிக்கு 24 பேர் இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளதாக மத்திய மாகாண சுகாதார அத்தியட்சகர் சாந்தி சமரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாண சுகாதார அத்தியட்சகர் காரியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது அவர் கருத்துத் தெரிவிக்கையில் லிஸ்பானியர் என்ற புதிய தோல் நோய் ஈ கடியினால் ஏற்பட்டு உள்ளது.

அவ்வாறு ஈ கடியினால் ஏற்பட்ட தோல் நோய் குணமாகாமல் உள்ள நோயாளிகள் உடன் தகுந்த மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நோய் குணப்படுத்த முடியும் எனவும் பரவும் தன்மை கொண்டதால் உடனே சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# போதைப்பொருள் வர்த்தகம் 12 பேருக்கு பிடியாணை

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கையில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் 12 பேருக்கு சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண வடக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொஷான் பிரேமரத்ன தெரிவித்துள்ளார். அவர்களில் சிலர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர் தெரிவித்துள்ளார். கம்பஹா மாவட்டக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரொஷான் பிரேமரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் நெருக்கமாக செயற்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளதாக இதில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (4)

# எம்.பிக்களின் மருத்துவக் காப்பீடு 10 இலட்சமாக அதிகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் மருத்துவக் காப்புறுதித் தொகையை 10 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கான யோசனையை முன்வைக்க சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.

இந்த விவகாரம் பாராளுமன்றத்தின் அவைக் குழுவில் விவாதிக்கப்பட்ட போதே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இதனைத் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெற்றுக் கொண்ட மருத்துவக் காப்புறுதி இரண்டு இலட்சம் ரூபாவாகும்.

பொருளாதார சூழ்நிலை காரணமாக அனைத்து மருத்துவ சேவைகளும் அதிகரித்துள்ள நிலையில் காப்புறுதித் தொகை போதுமானதாக இல்லை என பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். (4)

# விபத்து; பெண் பலி

(கொழும்பு)

எல்ல பதுல்ல- பண்டாரவெல பிரதான வீதியில் முச்சக்கரவண்டி மற்றும் பேருந்து மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்த சாரதி, பெண் ஒருவர் மற்றும் மற்றொருநபரும் காயமடைந்த நிலையில் பதுளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (4)

# அமெ. பறந்தார் ரஞ்சன்

(கொழும்பு)

ரஞ்சன் ராமநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை அமெரிக்கா சென்றதாக விமான நிலைய குடிவரவு திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கத்தார் ஏர்வேஸ் விமானம் KR-663 இல் டோஹாவிற்கு புறப்பட்டார். அங்கிருந்து அவர் மற்றொரு விமானத்தில் அமெரிக்கா செல்ல உள்ளார்.

அமெரிக்காவில் சுமார் 10 நிகழ்வுகளிலும் கனடாவில் 5 நிகழ்வுகளிலும் ரஞ்சன் ராமநாயக்க பங்கேற்க உள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க நேற்று முன்தினம் இரவு அமெரிக்கா செல்வதற்காக விமான நிலையத்தை வந்தடைந்த அவர் பயணத்தடை காரணமாக பயணத்தை இரத்து செய்திருந்தார்.

இந்நிலையில் நீதிமன்றத்தினால் தடை நீக்கப்பட்டதையடுத்து ரஞ்சன் ராமநாயக்க அமெரிக்கா சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 480 | 500 | 350-400 | 400 |
| உருளைக்கிழங்கு | 230 | 200 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 320 | 320 |
| தக்காளி | 280 | 280 | 350 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 140 | 240 |
| கோவா | 340 | 280 | 350 | 320 |
| கரட் | 350 | 400 | 450 | 450 |
| பூசணி | 200 | 200 | 200 | 200 |
| புடோல் | 250 | 250 | 240 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 140 | 200 |
| சின்ன வெங்காயம் | 480 | 400 | 550 | 600 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 250 | 300 |
| பாகற்காய் | 800 | 800 | 800 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 120 | 250 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 140 | 200 |
| பயற்றங்காய் | 650 | 750 | 800 | 600 |
| லீக்ஸ் | 300 | 300 | 320 | 300 |
| பீற்றூட் | 280 | 250 | 250 | 300 |
| கறிமிளகாய் | 650 | 800 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 450 | 400 |
| போஞ்சி | 400 | 450 | 400 | 450 |
| கத்தரிதம்புள்ள | 450 | 300 | — | 380 |
| கீரை - 1 பிடி | 140 | 140 | 120 | 160 |
| தேசிக்காய் | 800 | 600 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 65 | 70-90 |
| இராசவள்ளி | 260 | 250 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 650 | 400 | — | 480 |
| முள்ளங்கி | 160 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 40 |
| ஈரப்பலா | 120 | 150 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11 பவுண் தாலிக்...

தாலிக்கொடி ஒடு பிரித்து இறங்கி திருடப்பட்டமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

## பேராசிரியராக...

இதற்கான ஒப்புதலை பல்கலைக் கழகப் பேரவை நேற்று வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி சீவரட்ணம் வசந்தரூபாவின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த, மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத்தேர்வு முடிவுகள் ஆகியன நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், விவசாய பீடத்தின் பீடாதிபதியும் விவசாய இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சீவரட்ணம் வசந்தரூபா விவசாய இரசாயனவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7)

## சில இடங்களில்...

களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும் திணைக்களம் கூறியுள்ளது.

சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-7)

## யாழ்.பஸ் நிலை...

நிறமுடைய பெண், மஞ்சள் நிற சட்டையும் நீல நிற பாவாடையும் பச்சை மற்றும் வெள்ளை நிறமுடைய சேலையும் அணிந்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## லிட்ரோ எரிவாயு...

முதல் மீண்டும் லிட்ரோ எரிவாயு விலையைக் குறைக்க தீர்மானித்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த விடயத்தை நேற்றைய தினம் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்றுக் காலை மற்றுமொரு எரிவாயு கப்பல் இலங்கையை வந்தடைந்தது.

இந்த நிலையில் 3,700 மெற்றிக் தொன் எரிவாயு இறக்கும் பணி இன்றைய தினம் ஆரம்பமாகும். இதே வேளை உலக சந்தையில் எரிவாயுவின் விலையில் தற்போது குறைவு ஏற்பட்டுள்ளது.

இதன் பயனை மக்களுக்கு வழங்கும் நோக்கில் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் மீண்டும் லிட்ரோ எரிவாயுவின் விலையை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.(ம-7)

## வடக்கு மாகாண...

வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழா நேற்று சனிக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியில் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

காலை 8.30 மணியளவில் நெல்லியடி முருகன் ஆலயத்திலிருந்து பூசை வழிபாட்டுடன் தமிழர் பாரம்பரிய தப்பாட்டம், சிலம்பாட்டம், கும்மி, பறை இசை, கரகம், காவடி, மயிலாட்டம், ஆதிவாசிகள் ஆட்டம், பொம்மலாட்டம், ஒயிலாட்டம், காத்தான்கூத்து, அரிச்சந்திரப் பாட்டம், கரவலை பாடல் உட்பட பல ஆட்டங்கள் பாடல்களுடன் அழைத்து.வரப்பட்டனர்.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் தலைமையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பிரதீபன், கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், கௌரவ விருந்தினராக சொல்லருவி சிவகுமார், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் திரு.சண்முகதாஸ், திருமதி சண்முகதாஸ் மற்றும் விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச சபை உப தவிசாளர் பொன்னையா, பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் ச.அரியகுமார், வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் தயானந்தன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிறஞ்சன், வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் சத்தியசீலன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் அஜந்தகுமார், உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர். (ம-7)

## 22வது திருத்த...

தெரிவித்துள்ளார்.

22ஆவது திருத்தச் சட்டம் மூலம் நாட்டை மீளக் கட்டியெழுப்ப முடியாது எனத் தெரிவித்த அவர் அனைவரும் ஓரணியில் பயணித்தால் மட்டுமே நாடு மீளெழுச்சி பெறும் எனவும் கூறியுள்ளார்.

மேலும் 22 ஆவது திருத்தச் சட்டத்தால் எதைச் சாதிக்கப் போகின்றார்கள் என்பதை அரசாங்கம் பகிரங்கமாகக் குறிப்பிட வேண்டும் எனவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## மீன்...

பிரேமதாஸவின் எண்ணக் கருவின் பிரகாரம் செயற்படுத்தப்படும் "பிரபஞ்சம்" வேலைத்திட்டத்தின் கீழ் 38 ஆவது கட்டமாக ஹெட்கலை ஹட்டன் கேம்பிரிஜ் கல்லூரிக்கு பாடசாலை பஸ் ஒன்றினை நேற்றுக் காலை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அன்பளிப்பாக வழங்கி வைத்தார்.

அன்று தனது முன்மொழிவை கேலி செய்த தரப்பினர் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து தோட்ட மக்களின் வாழ்க்கையை நரகத்திற்குத் தள்ளியதும், பொறாமையால் இனவாதத்தைத் தூண்டிவிட்டு நாட்டை அழித்ததையுமே மேற்கொண்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு தேயிலை புதரின் கீழும் பெருந்தோட்ட மக்களின் தீராத துன்பங்களும் கண்ணீரும் இருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அந்த மக்களின் வாழ்க்கையை நரகத்திற்கு தள்ளும் பாவத்திற்கு பொறுப்பு ராஜபக்ஷ அரசாங்கம்தான் எனவும் தெரிவித்தார். (ம-7)

## துவிச்சக்கர...

"உலக நகரங்கள் தினத்தை" முன்னிட்டு இந்த திட்டம் தொடங்கப்படவுள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்மூலம், நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊழியர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் துவிச்சக்கர வண்டி மூலம் கடமைக்கு சமுகமளிக்க முடியும்.

துவிச்சக்கரவண்டிகளை வாங்குவதற்கு நிதி மற்றும் அவற்றை பாதுகாப்பாக நிறுத்த இடம் ஒதுக்கீடு உட்பட துவிச்சக்கரவண்டியில் கடமைக்குச் செல்லத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தமது ஊழியர்களுக்கு செய்துகொடுக்கப்படும் என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது. (ம-7)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில்**
**114 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- மூன்று பரப்பாகவும் நான்கு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- 18 அடி பாதையுடன், நன்னீர் ஊற்று நிலம், நல்ல சூழல்
- 775 வழி பேருந்துகள் செல்லும் காபெட் வீதி
- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபெட் விதி அருகாமையில்
- புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km தூரம் (சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து)
- ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் மட்டும்.

(தரகர் தேவையில்லை,
பார்வையிடும் நேரம் 8.00 am - 5.30 pm)

(13288)

தொடர்பு- 077 658 5999
076 755 8606,

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில்**
**12 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :-
  காலை 8.00 - மாலை 5.30

**1 பரப்பின் விலை - 600,000/=**

(13288)

தொடர்பு- 077 874 8135,
077 406 2649

## பணியாளர் தேவை

எமது கல்வி நிறுவனம் கீழ்வரும் பணியாளர்களை எதிர்பார்க்கின்றது.

01. வகுப்பு மேற்பார்வையாளர் (பெண்)
02.சிற்றுண்டிச்சாலை காசாளர் / ஊழியர் (பெண்)

31.10.2022 திங்கட்கிழமை மதியம் 2.00 மணிக்கு நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்கவும்.

(C-5178)

021 221 6690, 077 336 4055
யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்யமான கல்வி நிறுவனம்
(Navalar Road - Brown Road Junction, Jaffna)

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு சமையலாளர்கள், றொட்டி, சிற்றுண்டி தயாரிக்க தெரிந்தவர்கள், உணவு பரிமாறுபவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு (13285)

**021 221 6779**

## நீர்க்கசிவுக்கான இரசாயனப் பொருட்கள்

மழைக் காலத்தில் உங்கள் கட்டடங்கள் கூரைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை எங்களிடம் இரசாயனப் பொருட்களை பெற்று எமது தொழில்நுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்து கொள்ளலாம்.

(13298)

FINEX

போலிகளைக் கண்டு ஏமாற வேண்டாம்

உலகத் தரமிக்க இரசாயன பொருட்களை ஏக விநியோகஸ்தர் ஆகிய எம்மிடம் விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஏக விநியோகஸ்த்தர்கள்

**North & East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177,
077 232 3000
www.North & East engineering.com

## விரைவில் சிங்களம் பேச...

குறைந்த கட்டணத்தில் நான்கு மாதத்தில் சிங்களம் தெளிவாகப் பேசலாம். இன்றே இணையுங்கள்.

தொடர்பு (13299)

077 065 2181
070 403 5735
zoom

## கண்ணாடி அலுமாரி விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கிட்டத்தட்ட 10 அடி நீளமும் 8 அடி உயரமும் உடைய கண்ணாடி அலுமாரி விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

**077 493 7585**

இடம் - கொடிகாமம் (C-5180)



**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை | **55'000 விசாக்கள்** இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

**இன்னும் எட்டு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எம்மூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் (C-5159)

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எம்மூடாக விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours எனும் Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

**V2 Travels** 0768226240
0768226244

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## நன்றி நவிலலும்

### 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்புடையீர்!

கடந்த 02.10.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை**

அவர்களின்

மறைவில் கலந்துகொண்டு எமது துயரில் பங்கெடுத்து இறுதிக்கிரியையிலும் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன்,

அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் (01.11.2022) செவ்வாய்க்கிழமை இல்லத்திலும் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்**

(C-5182)

இல. 870, திருநகர் வடக்கு, கிளிநொச்சி. இங்ஙனம் - குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன்**
**3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13290)

தொடர்புகளுக்கு - **ஜெயம்**
**077 986 5457, 077 814 7389**

## மரண அறிவித்தல் தொடர்பானது



அரியகுளம் யாழ்ப்பாணம் புதிய உயர் கல்லூரி இயக்குனரும் பிரபல இந்து நாகரீக விரிவுரையாளருமாகிய

**அருள்நங்கை சண்முகநாதன்**

அவர்களின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று இடம் பெற்று அஞ்சலிக்காக புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் முற்பகல் 11.00 - 12.00 மணி வரை வைக்கப்பட்டு பின் நல்லடக்கத்திற்காக பூதவுடல் காக்கைதீவு கரையான் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

(C-5177)

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.